
# சுதந்திரன்

SUTANTIRAN

விலை: சதம் 60. தொலை பேசி: 23411 நிறுவியது: 1947

வள்ளுவர் ஆண்டு 2006 கார்த்திகை 21, ஜுஹுறஜ் 3 (7 12-75) ஞாயிறு புத்தகம் 29. இதழ் 19


## தர்மோபதேசம்!




## அமரர் இராசரத்தினத்தின் நூலுக்கு அரசாங்கம் தடை!

தமிழர் கூட்டணியின் நிர்வாகச்செயலாளராகவிருந்த அமரர் இராசரத்தினம் எழுதி தமிழ் நாட்டில் வெளியிடப்பட்ட "இலங்கைத் தமிழர்களுக்கு தனி நாடு ஏன்வேண்டும்"? என்ற ஆங்கில நூலுக்கு இலங்கை அரசு தடைவிதித்துவிட்டது. இந்நூல் இனவெறியைத் தூண்டுவதாக உள்ளதாகவும். தவருன கருத்துக் களைக்கொண்டுள்ளதாகவும், இத்தடைக்குக் காரணம் கூறப்பட்டுள்ளது.

சுதந்திரன் ஆசிரியர் எழுதிய "மே 22" நூலுக்குப் பின்னர் அரசாங்கம் பரபரப்படைந்த நூல் இதுவேயாகும். "மே 22" நூலை வெளியிட்டதற்காக மண்டூர் மகேந்திரன் இரண்டாண்டுகள் சிறைவைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. எனினும் "மே 22" தடைசெய்யப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.


# தமிழ் இளைஞர் குளிப்பதற்கும் மத வழிபாட்டுக்கும் தடை!

### கண்டிச் சிறைச்சாலையில் கொடுமையோ கொடுமை!

கண்டிச்சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களின் மனித உரிமைகள் அனைத்தும் சிறைச்சாலை நிர்வாகத்தினால் கடந்த ஒரு திங்களுக்கு மேலாக மறுக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. இந்த இளைஞர்களுக்கு குளிப்பதற்கும், கோவில் வழிபாட்டுக்கும் கூட தடைவிதித்திருப்பதாக சொல்லப்படுகிறது; அத்துடன் இவர்களை இவர்களது இரத்த உறவினர்கள் கூடப்பார்க்கக் கூடாதென்று தடை விதிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

கண்டிச்சிறைச்சாலையில் அமரசிங்கம், ஞானசேகரன் நடேசானந்தம், சிவஜெயம், சுதர்சன், ஆகிய ஐந்து இளைஞர்கள் வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே இந்த ஐந்து இளைஞர்களும் அக்டோபர் 30ம் திகதியிலிருந்து 'E' வார்ட்டில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனராம். இப்படி அடைத்து வைக்கப்பட்டதற்கு காரணம், அமைச்சின் உத்தரவு என்று கூறப்பட்டதாம்.

இப்படி அடைத்து வைக்கப்பட்டுள்ள இவர்கள் வெளியே அழைத்துவரப்படுவதில்லையென்றும், இவர்கள் மீது சூரிய ஒளிபட்டு ஒரு திங்களுக்கு மேலாகிறதென்றும், சிவஜெயம் மட்டுமே ஒரு விசாரணைக்காக கொழும்புக்கு கூட்டிச்செல்லப்பட்டதாகவும் அறியப்படுகிறது.—4-ம் பக்கம் பார்க்க




ஈழத் தமிழினத்தின் தனிநாடு கோரிக்கை பற்றி 18-11-75 தினத்தந்தி வெளியிட்டிருந்த கருத்துப்படம் இது!

# அடுத்த தேர்தலில் தமிழர் கூட்டணியின் சார்பில் காசி ஆனந்தன் போட்டியிடுவார்!

### தந்தை செல்வா சூசக அறிவிப்பு!

அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு தமிழர் கூட்டணியின் சார்பில் கவிஞர் காசி ஆனந்தனையும் ஒரு வேட்பாளராகக் கூட்டணி நியமிக்க விருப்பதை தேசிய அரசுப் பேரவையில் பேசிய தமிழர் கூட்டணித் தலைவர் மூதறிஞர் செல்வா சூசகமாக அறிவித்துள்ளார். பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் மானியம் மீது பேசிய போதே தந்தை



செல்வா இதை அறிவித்தார்.

அவர் கூறியதாவது:— "எத்தனையோ தமிழ் இளைஞர்கள் இன்று எந்தவித சாட்சியமுமின்றி சிறைகளில் தள்ளப்பட்டிருக்கின்றனர். இவர்களில் பெரும்பாலோர் தங்கள் குடும்பத்தை தங்கள் உழைப்பைக் கொண்டே பராமரித்து வந்தவர்கள்; தங்கள் விதவைத் தாயாரை— தங்கள் சகோதர சகோதரிகளைக் காப்பாற்றிவந்தவர்கள். இப்படிப்பட்ட இளைஞர்கள் எதுவித காரணமுமின்றி சிறைக்குள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் சிலர் இரண்டு ஆண்டுகட்கு மேலாக இப்போது சிறையில் வாடிக்கொண்டிருக்கிறார்கள்.

கவிஞர் காசி ஆனந்தனை இரண்டு ஆண்டுகளாக எதுவித சாட்சியமுமின்றிச் [illegible] [illegible] மீது வழக்குத்தொடர முடியாமல் இறுதியில் அவரை விடுதலை செய்தீர்கள். அவர் வெளியேவந்தவுடன் தொடர்ந்தும் எமது கட்சியின் இயக்கங்களில் தீவிர பங்கெடுத்தார். சிறையில் தாம் பட்ட அனுபவங்களை பொதுமக்களுக்கு எடுத்துக் கூறினார். உடனே மீண்டும் அவரைக் கைது செய்து சிறைக்குள் தள்ளிவிட்டீர்கள். இப்போதும் அவருக்கு எதிராக சாட்சியங்கள் எதுவும் இல்லை—இதே போன்றுதான் எவ்வித சாட்சியமுமின்றி ஏனைய இளைஞர்களையும் சிறைக்குள் தள்ளியிருக்கிறீர்கள் — இவர்கள் மீது ஒன்றில் வழக்குத்தொடருங்கள் — அல்லது இவர்களை விடுதலை செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இவ்வாறு இளைஞர்களை காரணமின்றிப் பிடித்து சிறையில் அடைத்து வைத்திருந்துவிட்டு வெளியே விட்டவுடன், அவர்கள் மக்களின் மனங்களில் நிறைந்து விடுகிறார்கள். இன்று மக்கள் மத்தியில் மாபெரும் செல்வாக்குப் பெற்றவராக காசி ஆனந்தன் விளங்குகிறார். அடுத்த பொதுத்தேர்தலில் அவர் ஒரு வேட்பாளராக போட்டியிடுவார். இப்படிச் செய்வதன் மூலம் தமிழ்ச் சமுதாயத்துக்கு இளந் தலைவர்களை, தியாகிகளை உருவாக்கித்தரும் நல்ல காரியத்தைப் பிரதமர் செய்து வருகிறார் போலும்!"

# நம்பிக்கையில்லாப் பிரேரணையை தமிழர் கூட்டணி ஆதரிக்கும்!

பிரதமர் மீது லங்கா சமசமாஜக் கட்சியினர் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை தமிழர் கூட்டணி பா. உ. க்கள் ஆதரித்து வாக்களிக்க வேண்டுமென்று அண்மையில் கொழும்பில் நடைபெற்ற தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அதே வேளையில் தமிழர் கூட்டணியின் 'தனி நாடு' தீர்மானம் வரும் போது தேசிய அரசுப் பேரவையில் 'கோரம்' நிலவுகின்ற முறையில் லங்கா சமசமாஜக் கட்சி பா. உ. க்கள் சபையில் பிரசன்னமாயிருக்க வேண்டுமென்று அக்கட்சியிடம் தமிழர் கூட்டணி பா. உ. க்கள் கோரவிருக்கின்றனர்.

# முஸ்லிம் பாடசாலைக்கு தனிச்சிங்களப் பெயர்!

கொழும்பு பண்டார நாயக வீதியில் சுதந்திரன் அலுவலகத்துக்கு எதிரேயுள்ள முஸ்லிம் பெண்கள் கல்லூரியான பாத்திமா கல்லூரியின் பெயர் தனிச் சிங்களத்தில் இடம் பெற்றிருப்பது கண்டு தமிழ்பேசும் இஸ்லாமியர்கள் வருத்தமடைந்துள்ளனர். இக் கல்லூரி புனரமைக்கப்பட்டு விரைவில் திறக்கப்படவுள்ளது. புதிய கட்டடத்தில் தனிச் சிங்களத்தில் கல்லூரியின் பெயர் செதுக்கப்பட்டுள்ளது. இக் கல்லூரியில் முஸ்லிம் மாணவிகள் தமிழிலேயே கல்வி கற்று வருவது குறிப்பிடத்தக்கது. கல்வியமைச்சர் பதியுதீன் மாமூத்தும் கொழும்பு மத்திய தொகுதி முதலாவது எம். பி. திரு. பீட்டர் கெனமனும், சிறுபான்மைச் சமூகத்தவர்களாகஇருந்தும்சிறுபான்மை மக்களின் மொழி இவ்வாறு ஒதுக்கப்பட்டு தனிச்சிங்களம் திணிக்கப்பட்டிருப்பது கண்டு மொழியுணர்வுமிக்க இஸ்லாமியர்கள் கொதிப்படைந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன் 7—12—75

# தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை மீட்டுக்கொடுக்க ஐ. நா. முன்வரவேண்டும்!

## மனித உரிமை தினத்தையொட்டி கோப்பாய் பா. உ. தரும் சிறப்புக் கட்டுரை!

மனித உரிமைகளை வெறும் உரிமைகளாக மட்டும் எடுத்துக்கொள்ள முடியாது. மனித உரிமைகளை அனுபவிக்க வேண்டியது மனிதனின் கடமையும் கூட. மனித உரிமைகள் மனிதனுக்கு இயல்பாக அமைந்த உரிமைகளாகும். இவற்றை யாரும் யாரிடமும் கேட்டுப்பெற வேண்டியதில்லை. ஆண்டவனால் அருளப்பட்டு மனித பிறப்பின் மகத்துவத்தால் அவனுக்கு இயல்பாக உண்டாயிருப்பவை மனித உரிமைகள். ஆகவே அவற்றை யாசிக்கவேண்டியதில்லை. மனித உரிமைகள் மீறப்படுகின்ற பொழுது—மறுக்கப்படுகின்ற பொழுது எம்மைப்பாதிக்காத போது, எமக்கென்ன வென்று யாரும் வாழாவிருக்க முடியாது. காரணம் மனித உரிமைகள் வெறும் உரிமைகள் மட்டும் அல்ல கடமையும்கூட. வெறும் கடமைகள் மட்டுமல்ல, நிர்ப்பந்தமும் கூட.

அக்கறை இல்லாதவர்கள் உரிமைகளை வலியுறுத்தாது, வேண்டாவெறுப்பாக, உலகுக்குப் பாரமாக இருந்து விட்டுப்போகலாம். கடமையாக இருந்தால் கூட பொறுப்பின்றி கடமையையும் அசட்டை செய்யலாம். மனித உரிமைகள் ஒரு நிர்ப்பந்தமாகவும் இருத்தலால் மனித உரிமைகளைத் தாமும் அனுபவிக்கவேண்டியதாகவும், பிறரும் அனுபவிக்கப் பார்த்துக்கொள்ள வேண்டிய கடப்பாட்டை நிர்ப்பந்தமாக உடையவர்களாகவும் மனிதர்கள் இருக்க வேண்டியவர்களாகின்றனர். உரிமையை இழக்க முன்வரலாம். விட்டுக் கொடுக்கலாம். கடமையைப் புறக்கணிக்கலாம். நிர்ப்பந்தத்தில் இருந்து யாரும் தப்பமுடியாது. இதை நாம் உணரவேண்டும் பிறருக்கும் உணர்த்தவேண்டும் மனித உரிமைகளின் மகத்துவம் அத்தனை உன்னதமானது.

### உரிமை மீறல்

இதனால்தான் மனித உரிமைகள் இன்னதெனப் பொது மக்கள் அறிந்து கொண்டுவிடக்கூடாதென்பதில் நாட்டமுடையதாக இலங்கை அரசு இருந்து வருகிறது. அப்படி நடந்து கொள்வதன்மூலம் மனித உரிமைகளை அதனால் தொடர்ந்து மீற முடிகிறது.

சாதி, இன, மத, நிறம், பால், வகுப்பு அடிப்படையில் பாரபட்சமோ, வேறுபாடோ காட்டப்படாதென்பது ஐ. நா. சாசனம் கூறும் ஒரு மனித உரிமை. புதிதாக யாத்த இலங்கைக் குடியரசின் அரசியல் யாப்பில் பௌத்த மதத்துக்கே முதன்மை கொடுக்கப்பட்டுள்ளது. பௌத்த சமயத்தை விருத்தி செய்வதும் பாராமரிப்பதும் அரசாங்கத்தின் கடமையென்று அரசியல் திட்டம் சாற்றுகின்றது. ஏனைய இந்து, இஸ்லாமிய, கிறீஸ்தவ மதங்களைப் பொறுத்தவரையில் அரசுக்கு அந்தக் கடமைகள் கிடையாது. பௌத்த மக்களுக்குக்கொடுக்கப்பட்ட கௌரவமான இடம் பிறமதத்தவர்களுக்கு மறுக்கப் பட்டுள்ளது. இது மனித உரிமை மறுக்கும் செயல்.

### சிறையில் தமிழ் இளைஞர்

அரசியல் காரணங்களுக்கு யாரையும்சிறையில் அடைக்கப்படாது. குற்றம் செய்தவர்களைக்கூட நீதி விசாரணைக்கு உட்படுத்தவேண்டும். குற்றம் உறுதியாகி குற்றத் தீர்ப்புப் பெற்றவர்களை மட்டுமே சட்டப்படி தண்டிக்கமுடியும். அது ஒரு மனித உரிமை. இலங்கையில் அப்படியில்லை, எவ்வித குற்றச் செயல்களுக்காகவும் அல்லாது பல தமிழ் இளைஞர்களை அரசு இன்று சிறையில் அடைத்து வைத்திருக்கின்றது. கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக, அவர்களை அடைத்து வைத்திருப்பதற்கான காரணம் என்னவென்று அரசாங்கத்துக்கே தெரியாது. செய்யாத குற்றங்களுக்காக கற்பனைசெய்யப்பட்ட, சோடிக்கப்பட்ட குற்றங்களுக்காக அவர்கள் நீண்ட நெடும் நாட்களாக சிறையில் நலிந்து வாடி வதங்குகின்றார்கள். அவர்களது இளமை சாகடிக்கப்படுகின்றது. அவர்களுக்கு நியாயம் வழங்கவேண்டுமென்பதில் இலங்கை அரசு அக்கறையில்லாது இருக்கக்கூடியதற்குக் காரணம் இங்கு மனித உரிமைகள் மறுக்கப்படுவதுதான்.

### சுய நிர்ணயம்

நாம் ஒரு தனி இனத்தவர்கள், நாம் ஒரு தனித்தேசிய இனத்தினர், ஐரோப்பியர் வருகைக்கு முன்பு நம்மை நாமே ஆண்டவர்கள். நிர்வாக வசதிக்காக வெள்ளையர் நீக்கிய எல்லைக்கோடுகள் அவர்களது காலனி ஆட்சி நீங்கியதும் மீட்கப்பட்டிருக்க வேண்டும். தமிழ்ப் பூமியின் எல்லை வரையறுக்கப்பட்டு தமிழ் ஈழத்தின் ஆட்சி தமிழர் கைக்குவந்திருக்கவேண்டும். காலனி ஆட்சிகள் இடம் பெற்ற நாடுகளில் எல்லாம் இதே நிலைதான். ஆளுகிற வசதிக்காக வெள்ளையர் இருந்துவந்த எல்லைக்கோடுகளை நீக்கியிருக்கிறார்கள். முன்பு இல்லாத எல்லைக் கோடுகளைப் புதிதாகத் திணித்தும் இருக்கிறார்கள். அப்படியான பிரச்சினைகள் ஆபிரிக்க நாடுகளில் நிறைய இருப்பதாக அம் மக்கள் தலைவர்கள் கூறுகிறார்கள்.



மொரிஷியஸ் தீவுகளிலும் அதே நிலைதான். தமிழ் மக்கள்தான் ஆதியிலே அங்கு சென்று குடியேறியவர்கள். பல தீவுகளில் இன்னும் அவர்கள் பெரும்பான்மையினர். பிறகுபோய்க்குடியேறியவர்கள் வேறு சில தீவுகளில் பெரும்பான்மையினர். எல்லாத் தீவுகளையும் சேர்த்து ஒரே நாடாக ஆக்கியமையால் அங்கு தமிழ் மக்கள் சிறுபான்மையினராக மாற்றப்பட்டுள்ளனர். அதனை அவர்கள் விரும்பவில்லை. ஆகவேதான் சுயநிர்ணய உரிமை தேசிய இனங்களுக்கு உண்டு என்று கூறும் மனித உரிமையை எப்படி நிலைநாட்டுவது என்ற பிரச்சினை ஐ. நா. வுக்கு ஏற்பட்டுள்ளது.

### ஐ. நா. வின் கடமை

இன்றைய நிலையில் ஒரு நாட்டின் உள்நாட்டு விடயத்தில்வேறு நாடுகளோ, ஐ. நா. சபையோ தலையிட முடியாது. இப்படிப்பட்ட பிரச்சினைகளை அது தொடர்ந்து ஆராய்ந்து வருகிறது. மனித உரிமைகளை மீட்டுக் கொடுப்பதற்காக அது தனித்தனிக் குழுக்களை அமைத்து நடவடிக்கை எடுத்துவருகிறது. தேசிய இனங்களுக்குள்ள சுயநிர்ணய உரிமையை வலியுறுத்துவதற்கான தனியொரு அமைப்பை ஐ. நா. பொதுச் சபை இன்னும் உண்டாக்கவில்லை. ஆனால் அது பற்றி அது சிந்தித்துவருகிறது. அதனைத் துரிதப்படுத்த வேண்டும். விரைவில் சுயநிர்ணய உரிமைக்கான ஒரு தனி அமைப்பு ஐ. நா. பொதுச்சபையால் ஏற்படுத்தப்பட்டால் இலங்கை தமிழர் பிரச்சினை மட்டுமல்ல சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட முன்னிற்கும் சகல இனங்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணக்கூடியதாக இருக்கும்.

சிறைக் கைதிகள் சித்திரவதைக்குள்ளாக்கப்படாதென்பது மனித உரிமைகளுள் ஒன்று. இன்று சி. ஐ. டி. தலைமை அலுவலகமான நாலாம் மாடியில் நடைபெறுவதை யாவரும் அறிவோம். அவர்கள் சொல்லுகிறபடி வாக்குமூலம் கொடுக்க நிர்ப்பந்திக்கும் பொருட்டு தமிழ் இளைஞர் பலர் பலவிதமான சித்திரவதைகளுக்கு உள்ளாகிவருகின்றனர். அனைத்துலக அமைப்பு ஒன்றே கைதிகளைச் சித்திரவதை புரியும் நாடுகளுள் ஒன்றாக இலங்கையையும் சேர்த்திருக்கிறது. "இப்படியான சித்திரவதைகள் மனிதஉரிமைகளுக்குமாறான இலங்கை அரசின் நடவடிக்கைகள். இதனை நிறுத்துவிக்கவேண்டியது ஒவ்வொரு மனிதனதும் உரிமை மட்டுமல்ல, கடமை மட்டுமல்ல, உரிமைக்கும் கடப்பாட்டுக்கும் மேலான ஒரு நிர்ப்பந்தமாகும். அந்த நிர்ப்பந்தத்தில் இருந்து அரசு மட்டுமல்ல தனிப்பட்டவர்களும் தப்பமுடியாது."

## அரசியலப்பா!

### சிறைமறைத் திறை

கால்மாறி வந்தாளாம் காந்தாரி; கீழ்த்தொங்கும்
வால்பற்றிப் பிடித்தாராம் நாலெம்பி; நாள்செல்ல
நாலுக்குள் ஒன்றுக்கே புறமோஷன், வால்விட்டுக்
கால்தொட்டுப் பணியாற்றும் மாகாண அதிகாரம்;
ஆள்வீரன், மூவர்க்கும் மேலாகத் தமிழ்த்தாயின்
பாலுண்ணும் சேய்நூறைச் சிறையிட்டான்
திறையாக.

### மாடிவீட்டு மாமியார்

"மாமியார் மகிமை'யதன் மகத்தான வெளியீடு;
பூமியிலே பறைசாற்றும் பெரும்நோட்டீஸ்;
அதன்மேலே
சாமியனும் தோழர்களும் சக்கைபோடு போட்டுவரும்
'மாமியார் கொடுமை'யதன் வெள்ளிவிழா
நோட்டீஸை
மூடித் தெரியாமல் ஒட்டியதால் தான் "நாலாம்
மாடிக்கு வா"வென்ற மகத்தான வரவேற்பு.

### இடம்வல நங்கை

வெளிக்கிட்டாள் சிறீமாமி பொதுத்தேர்தல்
புரம்சேர்ந்து
களிப்போடு வெற்றிவேல் வீட்டில்போய்க் குடியேற;
'இடப்பக்கம் ஐந்தேகல்,' எனக்கூறி "என்னெம்"மான்
சிவப்புத்தேர் கொண்டோட்டிச் சென்றானே; மருமானே
இறக்கிப்பின் 'வலப்பக்கம் இரண்டேகல் வா,' என்றான்
சிரிப்புத்தான் சிறீமாமீ சென்றாளே பின்நோக்கி.

### கூட்டக் கணக்கு

கோலாட்டம் காணவொரு நாற்பதுபேர்,
பூச்சொரியும்
மேலாட்ட மேனியர்க்கும் நாற்பதுபேர்,
'பேயொடுங்கும்
கண்டிப் பறையடிக்கும் ஆடுங்கள்,' என்று சொல்லி
முண்டி யடித்தனரே முப்பதுபேர்; முடிவில்வரும்
கூத்துப் பார்க்கவென முப்பதுபேர்; கூவுகிறான்
'கூட்டத்தில் லட்சம்', என சிபீஸிக் கோட்டானும்.

—பதிகன்

# "தொழிலாளவர்க்கத்துக்கு இது மாபெரும் துரோகம்!"

## புதிய சட்டத்துக்கு இ. தொ. கழக பொதுச்செயலாளர் கண்டனம்!

"தோட்டத்தில் குடியிருப்போரை வெளியேற்றும் சட்டத்தின் மூலம் தொழிலாளர் வர்க்கத்திற்குமாபெரும் துரோகத்தை இவ்வரசு இழைத்துவிட்டது. தோட்டங்கள் அரசால் சுவீகரிக்கப்பட்டதை அடுத்து அரசுக்கு நன்றி செலுததுமுகமாக கடந்த 26-10-75ல் நுவரெலியாவில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க அளித்த வாக்குறுதி ஒன்று; இன்று நடப்பது ஒன்று. தோட்டங்கள் அரசுடமையாக்கப்பட்டால் தொழிலாளர்கள் வெளியேற்றப்படுவர், பழிவாங்கப்படுவர் என்ற பிரச்சாரங்களில் நம்பிக்கை வைக்க வேண்டாமென்றுகேட்டுக் கொண்ட அவர் இன்று அவரது ஆட்சியில் தோட்டத்தில் குடியிருப்போரை நீதி மன்றத்தின் உத்தரவு இன்றியே வெளியேற்றலாம் என்ற சட்டத்தை ஏற்படுத்தியுள்ளார். இவ்வாறான சட்டம் எந்த ஒரு நாட்டிலும் கிடையாது."

இவ்வாறு பத்திரிகைக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் இ. தொ. கழக பொதுச் செயலாளரும் சட்டத்தரணியுமான திரு. மு. பரராஜசிங்கம் அவர்கள் கூறியுள்ளார். அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது.

இச்சட்டத்தின் மூலம் தொழிற்சங்க உரிமைகள் மறுக்கப்படமாட்டாது என்ற காணியமைச்சரின் கூற்றும் பொய்யாகின்றது. இவ்வரசின் தேசிய மயக்

—4-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிமா அம்மையாரின் 'கருணை வற்றி' விட்டதுதான் தமிழ் இளைஞர்கள் மீண்டும் சிறைப்படக் காரணமா?

22-8-75ந் திகதியிலும், 2-9-75 இலும் இச்சபையில் ஒத்திவைப்புப் பிரேரணை மீது நான் எழுப்பியிருந்த கேள்விகளுக்குப் பதிலாகப் பிரதமர் அவர்கள் தன்னுடைய பிரதியமைச்சர் மூலமாக இச்சபையில் 2-9-75ல் சமர்ப்பித்திருந்த அறிக்கையைப் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

துரையப்பாவின் கொலை ஓர் அரசியல் கொலையே யென்றும், தமிழர் கூட்டணியின் தீவிர இயக்கத்தின் விளைவே அது என்றும் தம்முடைய மனத்தளவில் முடிவு கட்டியிருப்பதாக பிரதமர் தமது மேற்படி அறிக்கையில் தெளிவாகக் கூறியிருந்தார். ஆதாரமற்ற இத்தகைய குற்றச்சாட்டை தமிழர் கூட்டணிக்கு எதிராகச் சுமத்துவது தமது அரசியல் நோக்கத்துக்கு ஆதாயமாக இருப்பதனால் பிரதமர் அவர்கள் அத்தகைய கருத்தைக்கொண்டிருப்பதையும், அதை வெளிப்படுத்துவதையும் என்னால் புரிந்துகொள்ள முடிகிறது.

ஆனால் — அவருடைய கருத்துக்கள், துரையப்பாவின்கொலை தொடர்பாகப் பொலிசாரினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சுதந்திரமான விசாரணையில் பாரதூரமாகத் தலையிடுவதாக அமைந்திருக்கிறது. வேறு திசைகளிலன்றி — தமிழர் கூட்டணியின் திசையிலேயே கொலைகாரரை தேடுமாறு பொலிசாருக்குத் திட்டவட்டமான, தவறான பாதையைக் காட்டுவதாகவே அது உண்மையில் அமைந்திருக்கிறது.

பிரதமரின் நோக்கம் என்னவென்பதை நான் அவரிடமிருந்து அறிய விரும்புகிறேன். அவர் உண்மையிலேயே துரையப்பாவைக் கொலை செய்தவர்களைக் கண்டுபிடிக்க விரும்புகிறாரா,அல்லது துரையப்பா கொலையில் தமிழர்கூட்டணியைச் சம்பந்தப்படுத்துவதிலேயே அக்கறை காட்டி வருகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

கடந்த நான்கு மாத விசாரணையின் பயனாக — விசாரணைக்குட்படுத்தப்பட்டவர்களின் எலும்புகள் முறிந்தனவே தவிர —பொலிசாரினால் உருப்படியான எதையும் சாதிக்கமுடியவில்லை. இதற்குக் காரணம், உண்மையைக் கண்டுபிடிப்பதை விட, துரையப்பாவின் கொலையைப்பற்றி அவர்களாக முன்கூட்டியே தங்கள் மனத்தில் சொந்த கருத்துக்களை நிரப்பிக் கொண்டிருப்பதுதான்!

திரு. துரையப்பா, பல சங்கதிகளிலும் தொடர்பு கொண்ட ஒருவர்; இதில் அரசியல் என்பது ஒரு அம்சம் மட்டுமே. பிரதமரும், கொலை விசாரணைக்குப் பொறுப்பாகவுள்ள பொலிசாரும் துரையப்பாவின் வாழ்க்கையின் ஏனைய அம்சங்களையும் அவர் மேற்கொண்டிருந்த நடவடிக்கைகளையும் பற்றித்தங்கள் கவனத்தை ஏன் திருப்பமுன்வரவில்லை?

இரண்டு ஆண்டுகட்கு மேலாகத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் இந்த ஆண்டுத் தொடக்கத்தில விடுதலை செய்யப்பட்டதைத் தமது 'காருண்ய நடவடிக்கை' என்று பிரதமர் இச்சபையில் வர்ணித்திருந்தார்.

இந்த இளைஞர்கள் 1972ம் ஆண்டு மத்தியிலிருந்து, 1975ம் ஆண்டு தொடக்கம் வரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் விசாரணையின் போது பொலிஸ் நிலையங்களிலும், 4வது மாடியிலும், துன்புறுத்தப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டனர். பொலிசாரால் அவர்களுக்கு எதிராக எவ்வித சாட்சியத்தையும் கண்டுபிடிக்க முடியவில்லை, எந்த ஒரு நீதிமன்றத்திலும், எந்த ஒரு குற்றச்சாட்டின்பேரிலும், எந்த ஒரு இளைஞரையும் நிறுத்துவதற்கு பொலிசாரால் முடியவில்லை. சட்டமா அதிபர் அவர்களை விடுதலைசெய்யும்படி சிபார்சு செய்திருந்தார். நிலைமை இப்படியிருக்கும்போது 'இரக்கம்' பற்றி எதற்காகப் பேசவேண்டும்? பிரதமரின் கிருபாகடாட்சம் கிட்டாவிடின், இந்நாட்டில் குற்றமற்ற அப்பாவி இளைஞர்கள் விடுதலையின்றி சிறைச்சாலைகளுக்குள் கிடந்து அழுந்தியே தீரவேண்டும் என்ற நிலைக்கு இந்த நாடு வந்துவிட்டதா? தனது மனச்சாட்சியை மதித்தும், பொதுசனஅபிப்பிராயத்துக்குத் தலைவணங்கியும்—தடுப்புக்காவலில் இருந்த தமிழ் இளைஞர்களை விடுதலை செய்தேன் என்று பிரதமர் கூறியிருந்தால், இன்னும் பொருத்தமாக இருந்திருக்கும்.

இந்த ஆண்டுத் தொடக்கத்தில் விடுதலை செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களில் பெரும்பாலானோர் மீண்டும் கைது சைய்யப்பட்டிருக்கின்றனர். கடந்த 4, 5 மாதங்களாக வெலிக்கடைச் சிறைச்சாலையில் இவர்கள் அடைத்துவைக்கப்பட்டிருக்கின்றனர். எந்த ஒரு நீதிமன்றத்திலும் இவர்கள் நிறுத்தப்படவில்லை. எந்த ஒரு அதிகாரியினாலும் இவர்கள் விசாரணைக்குட்படுத்தப்படவில்லை. சிறைச்சாலையில் இவர்கள் வெறுமனே வைக்கப்பட்டிருக்கின்றனர். பிரதமரிடமிருந்து கருணை வெள்ளம் வற்றிவரண்டு விட்டதாலா இந்த இளைஞர்கள் மீண்டும் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்? தடுப்புக்காவல் சிறையில் நிரந்தரமாகவே தள்ளிவிடும் அளவுக்கு இந்த இளைஞர்கள் செய்த குற்றம்தான் என்ன?

கவிஞர் காசி ஆனந்தன் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்களில் ஒருவர். அவர் தன்னுடைய போராட்டத்தின் நோக்கம் என்னவென்பதை தமக்கே 'யுரிய கவிதை நடையில் பின்வறுமாறு கூறியிருக்கிறார்—

''மானம் இழந்து தலை சாய்ந்து
மாற்றார்க்கடிமைத்
தொழில் செய்து
கூனல் விழுந்த தமிழ் வாழ்வின்
கொடுமை தீர்க்கப்
புறப்பட்டேன்!''

இதைத்தான் அவர் கூறுகிறார். ஒருவன் தன்னுடைய சமுதாயத்தின் உரிமைக்காகப் போராடுவது குற்றமா? பிரதமர் அவர்கள், உலகில் நடைபெற்றுவரும் விடுதலைப் போராட்டங்களையும் விடுதலைப் போராட்டங்களையும் விடுதலை இயக்கங்களையும் ஆதரிக்கும் ஒருவர். அப்படிப்பட்டவரின் மனச்சாட்சி காசி ஆனந்தனையும் மற்றும் அவரது நண்பர்களையும் சிறைச்சாலையில் வைப்பதற்கு எப்படி அனுமதிக்கிறதென்று எனக்குப் புரியவில்லை!

ஈழத்தில் தமிழர்களின் சுதந்திரத்துக்குப் போராடும் காசி ஆனந்தன், சேனாதிராசா, வண்ணை ஆனந்தன், வரதராசா, நித்தியானந்தன் போன்ற இளைஞர்களை சிறைக்குள் தள்ளிவிட்டு, உலகமேடைகளிலே நின்று அம்மையார் உலக விடுதலை இயக்கங்களை ஆதரித்துக் குரல் கொடுக்கும்போது— அம்மையாரைப் பற்றி உலகம் என்ன நினைக்கும்?

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காகவே யாழ்ப்பாணத்தில் சகல பொலிஸ் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாகப் பிரதமர் கூறியிருந்தார். சட்டமும் ஒழுங்கும் மீறப்படுதல் யாழ்ப்பாணத்தில் மட்டும் விசேடமாக நடைபெறுகிறதா என்பதைப் பிரதமரிடம் கேட்க விரும்புகிறதா என்பதைப் பிரதமரிடம் கேட்கவிரும்புகிறேன். நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும்போது யாழ்ப்பாண நிலைமை அப்படியொன்றும் [illegible] இல்லை. நாட்டின் பெரும்பாலான இடங்களில் சட்டமும் ஒழுங்கும் மீறப்படுதல் இன்று பொதுவான ஒரு நிகழ்ச்சியாகவே இருநதுவருகிறது.


இலங்கையில் எல்லா இடங்களிலும் அனுமதியற்ற றிவோல்வர்கள் கண்டு பிடிக்கப்படுகின்றன யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி ஏனைய இடங்களிலும் டைனமைட் வெடிகள கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. நாடு முழுவதும் பயங்கர ஆயுதங்களுடன் கூடிய கொள்ளைகள் நடைபெற்றுவருகின்றன. ஆனால் யாழ்ப்பாணத்துக்கு மட்டும் விசேடமான பொலிஸ் நடவடிக்கைகள் ஏன்? யாழ்ப்பாணத்தைத் தவிர நாட்டின் வேறு எந்த ஒரு பகுதியைச் சேர்ந்த குக்கிராமங்களுக்காவது இயந்திரத் துப்பாக்கிகளை கொண்ட பொலிஸ், இராணுவ, கடற்படை வீரர்களையும், இராணுவக் கார்களையும் தேடுதலுக்கென்று பிரதமர் அனுப்பி வைத்ததுண்டா?

தமிழ் மாநாட்டையொட்டி அரசாங்கம் நடந்து கொண்டவிதம், இந்நாட்டுத்தமிழ் மக்களின் உணர்ச்சிகளை மட்டுமன்றி — உலகெங்கும் வாழும் தமிழர்களின் உணர்ச்சிகளையும் தட்டியெழுப்பி விட்டிருக்கிறது.

தமிழ் மக்களை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளையிட்டு அவர்களது தலைவர்களுடன் பேச்சுவார்த்தை தானும் நடத்துவதற்கு மறுத்துவிட்ட செயல் பொறுப்புணர்ச்சியுடன் கூடியதா? என்று நான் அம்மையாரிடம் கேட்க விரும்புகிறேன்!

பிரதமரும் அவரது அரசாங்கமும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்பாத காரணம்— அவர்கள் இலங்கையை ஒரு மொழி, ஒரு மதம், ஒரு இனம் உள்ள ஒரு நாடாக்க விரும்புவது தான்!

## தேசிய அரசப் பேரவையில் தர்மர் விளாசல்! பிரதமரின் அறிக்கைக்கு சுடச்சுடப் பதில்!!



அரசாங்கத்தின் நோக்கம் மிகவும் தெளிவானது. துரையப்பாவின் கொலையை அரசாங்கம் தன்னுடைய சொந்த அரசியல் நோக்கத்துக்காகப் பயன்படுத்துகிறது. யாழ்ப்பாணத்தில் ஒரு பயங்கர ஆட்சியை கட்டவிழ்த்துவிட்டு, தமிழ் மக்களைப் பயமுறுத்தி அடக்கி வைப்பதற்கு துரையப்பாவின் கொலையை அரசு பயன்படுத்துகிறது.

பிரதமர் அவர்கள் தமது அதே அறிக்கையில் தமிழ்த் தலைவர்களுக்கு புத்திமதியொன்றையும் கூறியிருக்கிறார். பொறுப்புணர்வுடன் செயல்படுமாறு அவர் தமிழ்த் தலைவர்களுக்கு ஆலோசனை கூறியிருக்கிறார். பல தடவைகளில் அதே பொறுப்புணர்ச்சியைதாமே பின்பற்றாத பிரதமர் பொறுப்புணர்ச்சியைப் பற்றிப்பேசியிருந்ததைக் கண்டு நான் ஆச்சரியப்பட்டேன்.

கடந்த ஆண்டு (1974)சனவரித்திங்களில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டுக்கு எதிராகப் பிரதமரும், அவரது அரசாங்கமும் முடிந்த அளவுக்கு பல்வேறு முட்டுக்கட்டைகளைப் போட்டது பொறுப்புணச்சியுடன் செய்யப்பட்டகாரியமா? என்று நான் கேட்கவிரும்புகிறேன்.

சனவரி 10ம் நாள் ஒன்பதுபேர் உயிரிழக்கவும், பயங்கர சம்பவங்கள் நிகழவும் காரணமாக இருந்த பொலிஸ்தாக்குதல் பற்றி பகிரங்க விசாரணை நடத்துவதற்கு மறுத்துவிட்டது தான் பிரதமர் காட்டிய பொறுப்புணர்ச்சியா? இந்நாட்டிலுள்ள தமிழ் மக்கள் அனைவரும் — எதிர்க்கட்சி முழுவதும் — சனவரி 10 சம்பவங்கள் பற்றி விசாரணை நடத்தக்கோரியும் பிரதமர் அதற்கு மறுத்துவிட்டது பொறுப்பான செயலா?

தாங்கள் விரும்பிய இடத்தில் ஒரு கலாசார மாநாட்டைக்கூட நடத்துவதற்கு தாங்கள் உரிமையற்றவர் என்பதை இந்நாட்டுத்தமிழ் மக்களுக்குப் பிரதமர் உணர்த்திவிட்டார்! உலகத்தமிழ் மக்களின் சுதந்திர தாகத்தை பாலங்களைக் கட்டிக்கொடுத்தோ — இங்கும் அங்கும் றோட்டுக்களைப் போட்டுக்கொடுத்தோ — மீன்பிடிப்பயிற்சிக்கூடத்தை நிறுவிக்கொடுத்தோ — கூட்டுறவுக் கடைகளில் வேலை கொடுப்பதன் மூலமோ தணித்துவிட முடியாதென்பதை அரசாங்கம் உணர வேண்டும். சலுகைகளையும், சிறு சிறு உதவிகளையும் செய்து தமிழ் மக்களை விலைக்கு வாங்கிவிடமுடியாது; தமிழர் பிரச்சினைக்கும் தீர்வு காணமுடியாது!

தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரே வழி — தமிழினம் ஒரு தனித் தேசிய இனம் என்பதைஏற்றுக்கொண்டு அவர்களது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அவர்கள் தங்கள் தலைவிதியை தாங்களே அமைத்துக்கொள்ளும்படி விட்டுவிடுவதுதான்!

(25-11-75ல் தேசிய அரசுப்பேரவையில் நிகழ்த்திய உரை)

''திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை, திருப்பாவை.''

15 மில்க்வைற் நீல சோப் அல்லது 2 பார் சோப் அல்லது 2 நீம் வாசனை சோப் மேலுறைகளை அனுப்பி மேற்படி புத்தகம் ஒன்றைப்பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்.

யாழ்ப்பாணம்.

வெளிநாட்டுப் பயணத்திற்கு பாஸ்போட், ரிக்கற் ஆகியன ஒழுங்கு செய்வதற்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

சிவசக்தி

(ட்ரவல்) ஏஜன்சி,

260/17, 2ம் மாடி,
புளொக் 'D'
மாடிக் கட்டடம்,
கொழும்பு - 4.

260/17, 2nd Floor,
'D' Blcck Flats,
Colombo - 4.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# மனித உரிமை நாள்

மனித உரிமைச்சாசனம் ஐ. நா. சபையில் நிறைவேற்றப்பட்ட 27வது ஆண்டு நினைவு நாளை — 'மனித உரிமை நாளாக' டிசம்பர் பத்தாம் நாள் உலக நாடுகள் பலவும் கொண்டாடுகின்றன.

மனித உரிமைச்சாசனத்தில் கையொப்பமிட்டு அதை ஏற்றுக்கொண்டு—அதே வேளையில் நடைமுறையில் அச்சாசனத்தில் கூறப்பட்டிருக்கும் உரிமைகளை சகல மக்களும் அனுபவித்திட இடந்தராது அவற்றை மறுத்துவரும் நாடுகளும் 'மனித உரிமை நாளை' ஒரு சடங்கு போல—சம்பிரதாயம் போல கொண்டாடத் தவறுவதில்லை!

அதே சமயம் மனித உரிமைகள் மறுக்கப்பட்டு நசுக்கப் படும் மக்கள் இந்த மனித உரிமை நாளை உயிர்ப்போடும், உணர்ச்சியோடும் உத்வேகத்தோடும் கொண்டாடுகிறார்கள்!

இலங்கையைப்பொறுத்தவரை — மனித உரிமைகளை தமிழினத்துக்கு மறுதலித்து வரும் இலங்கை அரசு மனித உரிமை நாளை 'சம்பிரதாய பூர்வமாக' ஆண்டுதோறும் கொண்டாடும் அதே சமயம் இலங்கை அரசினுல் மனித உரிமைகள் மறுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு வரும் ஈழத் தமிழ்த்தேசிய இனம், எழுச்சியோடும், உயிர்த்துடிப் போடும் உரிமையுணர்வோடும் 'மனித உரிமை நாளை. மகத்தான தினமாகக்கொண்டா . வருகிறது.

இந்நாட்டில் ஐ. நா. மன்றம் பிரகடனப்படுத்திய மனித உரிமைகள் அனைத்தும் ஈழத்தமிழினத்துக்கு மறுக்கப்பட்டுவருவது வெள்ளிடைமலை!

இனத்தினுல் தமிழனுகப் பிறந்தவன், இந்நாட்டில் எல்லாத்துறைகளிலும், தாழ்ந்த நிலைக்குத்தள்ளப்பட்டிருக்கிறுன். யாராலும் மறுக்கமுடியாத அவனது பிறப்புரிமையான சுதந்திரம் இங்கு அவனுக்கு மறுக்கப்படுகிறது.

மொழி, இன, மத, அரசியல் அடிப்படையில் தமிழனுக்கு அப்பட்டமான பாரபட்சம் காட்டப்படுகிறது.

தமிழனுக்கு இந்நாட்டுச் சட்டங்கள் பாதுகாப்பளிப்பதாக இல்லை; மாருக தமிழர்களை பயமுறுத்தவும், அடக்கவும், துன்புறுத்தவும், சிறைக்குள் தள்ளவுமே சட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன!

தமிழனின் தேசிய இனத்தன்மையை (NATIONALITY) அழித்தொழிக்கும் முயற்சிகள் உச்சக்கட்டத்தையடைந்துள்ளன.

தமிழன் தனது சுதந்திரத்தைக்கோரினுல்அவன் சிறைக்குள் தள்ளப்படுகிறுன்! சுதந்திரமாக தனது கருத்துக்களை வெளியிடவோ, தனது கலாசார, மொழி, இலக்கிய வளர்ச்சிக்கு வேண்டிய சாதனங்களை வெளிநாடுகளிலிருந்து வரவழைக்கவோ ஒரு கலாசார மாநாட்டைத்தானும் நடத்திடவோ தமிழனுக்கு அனுமதி இல்லை! சுதந்திரமாக தமது கருத்துக்களைக் கூறிய தமிழ் இளைஞர்கள் இன்று சிறைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்! 1974ப் ஆண்டுஉலகத் தமிழ் மாநாட்டின்போது, அப்பாவித் தமிழ்ப் பெண்கள் மீது பொலிசார் மிலேச்சத்தனமாகத் தாக்கிய சம்பவத்தை நாம் மறந்துவிடமுடியாது!

அரசாங்கத்தில் தமிழினத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பெரும்பாலோர் அங்கம் வகிக்கவில்லை; தமிழனத்தின் சம்மதமின்றி அவன் ஆளப்படுகிறுன். தமிழன் தனது நாட்டைத்தானே ஆளும் உரிமையை அங்கீகரிக்க சிங்கள அரசு பிடிவாதமாக மறுத்துவருகிறது!

அரசாங்க சேவைகளில் தமிழனுக்கு பாரபட்சமும் மொழித்திணிப்பும் நடைமுறையிலிருக்கின்றன.

அவசரகாலச் சட்டப்பிரமாணத்தின் கீழ் மலையகத் தோட்டங்களில் வேலை செய்யும் பெரும்பான்மையான தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களை—அவர்கள் 'கரைச்சல்' கொடுக்கிறுர்கள் என்கிற சாட்டின்கீழ்—விரட்டியடித்திடச் சதித்திட்டம் தீட்டப்படுகிறது!

தோட்டத் தமிழ்த் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை—போதிய ஊதியமின்மை, சுகாதார, கல்வி வசதியின்மை — போன்ற காரணங்களினுல் மோசமடைந்து பட்டினிச்சாவுகள் தோன்றும் துர்ப்பாக்கிய நிலைக்கு வந்துவிட்டது!

கல்வியிலோ—மொழிவாரித்தரப்படுத்தல் எனும் சதிகாரத்திட்டத்தின் கீழ் தமிழ் மாணவன் ஒதுக்கப்படுகிறுன் தமிழ் மாணவனின் இடத்தைப்பறித்து சிங்கள மாணவனுக்கு கொடுக்கிறுர்கள்!

ஆக மனித உரிமை அனைத்தும் மறுக்கப்பட்ட நிலையில் தமிழ்த் தேசிய இனம் தன்னுடைய சுதந்திரத்துக்காக தமிழ் ஈழத்துக்காக—இன்று போராடிவருகிறது.

இந்தப்பெரிய உண்மையையும் — இலங்கைச் சிங்கள அரசின் ஏகாதிபத்திய அடக்குமுறைப் போக்கையும்— உலக நாடுகள் அறிந்துகொள்ளும் விதத்தில் 'மனித உரிமை நாளை' ஆக்கிரோஷத்தோடும் எழுச்சியோடும், உயிர்ப்போடும் இந்நாட்டிலும் இங்கிலாந்து இந்தியா போன்ற நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் கொண்டாட வேண்டுமென்றுகேட்டுக்கொள்ளுகிறேம்!

## இலவச சமயநூல்கள் விநியோகம்

நிகழும் 10-12-75 புதன் கிழமை தொட்டு 19-12-75 வெள்ளிக்கிழமை வரை திருவெம்பாவை — ஆர்த்திரா தரிசன உற்சவகாலத்தை முன்னிட்டு "கால காலன்" என்ற சைவசாமய சமய நூல் இலவசமக விநியோகிக்கப்பட இருக்கிறது. இதனைப் பெற விரும்பும் அன்பர்கள் நேரிலோ; அல்லது தமது சொந்த விலாசம் எழுதிய 15 சதம் முத்திரை ஒட்டிய கடித உறையை எஸ். எஸ். வி. பெரமநாயகம்பிள்ளை ஸ்தாபனம், இல. 161, ஐந்தாம் குறுக்குத் தெரு, கொழும்பு 11 என்ற விலாசத்தில்கு அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.

இதே திருவெம்பாவை உற்சவகாலத்தைமுன்னிட்டு "விடையேறும் வித்தகன்" என்ற சமய நூலும் இலவசமாக விநியோகிக்கப்பட இருக்கிறது. இதனைப் பெற விரும்பும் பக்தர்கள் நேரிலோ; அல்லது தமது சொந்த விலாசம் எழுதிய 15 சதம் முத்திரை ஒட்டிய கடித உறையை குமரன் அச்சகம், இல. 201, டாம் வீதி, கொழும்பு-12 அல்லது அதன் ஸ்தாபனமாகிய விஜயலட்சுமி புத்தகசாலை, இல. 248, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-6 என்ற விலாசத்திற்கு அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.

ஸர்வஜன க்ஷேமத்திற்காக இதுவரை விரதகாலங்களுக்கேற்ப பல சமய நூல்களைத் தொகுத்தளித்த ஆனைக் கோட்டையூர் சின்னத்துரை நவரத்தினம் அவர்கள் இப்பொழுது மேற்படி இரண்டு நூல்களையும் தொகுத்து உதவியுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 'டெயிலி மிரரின்' ஒப்பாரி!

கொழும்பு விவேகானந்த சபையினர் நடத்திய சேர். பொன். இராமநாதன் நினைவு விழாபற்றிய அழைப்பிதழ் ஆங்கிலத்திலும், தமிழிலும் மட்டுமே அச்சிடப்பட்டுள்ளதாம்; சிங்களத்தில் அது அச்சிடப்படவில்லையாம்; இதற்காக ஒரு ஆசிரியத் தலையங்கமே எழுதி— இச்செயல் இனவெறியைத் தூண்டிவிடக்கூடியது என்று கண்டித்துள்ளது அம்மையாரின் புத்திரனின் ஆதிக்கத்திலிருப்பதாக சொல்லப்படும் 'டெயிலி மிரர்' ஏடு'

விவேகானந்த சபை பொதுவாகத் தமிழர்களுக்கும் —குறிப்பாக சைவ சமயத்தவர்களுக்கும் — உரிய ஒரு தனிப்பட்ட சமய நிறவனம்; தமிழர்களால் நிர்வகிக்கப்பட்டு வரும் ஒரு நிறுவனம்; அத்தகைய நிறுவனம் தனக்கு விரும்பிய மொழியில் தனது நடவடிக்கைகளை செயற்படுத்துவதை யாரும் ஏன் என்றுகேட்கமுடியாது. அகில இலங்கை பௌத்த காங்கிரஸ்தனது நடவடிக்கைகளை தமிழிலும் ஏன் செய்யவில்லை. என்று எப்போதாவது 'டெயிலி மிரர்' கேட்டதுண்டா? கேட்க அதற்குத் துணிவுண்டா?

தமிழர்கள் ஆளப்படும் அடிமைச்சாதி என்ற உணர்வுதான் டெயிலி மிரரை விவேகானந்த சபைக்கு எதிராக விஷம் கக்கவைத்திருக்கிறது.

நாள்தோறும் அரசாங்கத்திடமிருந்து தமிழனுக்கு தனிச் சிங்களத்தில் கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. சிங்களம் தமிழனது தொண்டைக்குள் வலிந்து திணிக்கப்படுகிறது. இந்த அநீதியை தட்டிக்கேட்க— கண்டித்திட வக்கற்ற டெயிலி மிரருக்கு விவேகானந்த சபையைப் பற்றியெழுத என்ன யோக்கியதை இருக்கிறது.

'டெயிலிமிரரின்' இத்தகைய பயமுறுத்தல்களுக்கெல்லாம் ஈழத்தமிழன் பணியமாட்டான் என்பதை அனுராபண்டாரநாயகாவுக்கும் அம்மையாருக்கும் கூறிவைக்க விரும்புகிறேம்.

### தமிழ் இளைஞர் ...

—1-ம் பக்கத் தொடர்

இவர்கள் சிறை வைத்தியரைப் பார்க்கவும் அனுமதிக்கப்படவில்லையென்றும், குளிப்பதற்கும் கோவில் வழிபாட்டுக்கும் கூட வெளியே அழைத்துச்செல்லப்படுவதில்லையென்றும் சொல்லப்படுகிறது. சமூக நல அதிகாரி (welfare officer) இவர்களை கோவிலுக்கு அழைத்துச்செல்ல முயன்றபோது அங்குள்ள ஜெயிலர் அதற்குத் தடைவிதித்துவிட்டாராம்.

இவர்கள் றிமாண்ட் கைதிகள் என்ற முறையில் உறவினர்கள் மட்டுமன்றி யார் வேண்டுமானுலும் இவர்களைப்பார்ப்பதற்கு முன்னர் அனுமதிக்கப்பட்டு வந்தது. ஆனுல் இட்போது இரத்த உறவினர்கள் கூட இவர்களைப்பார்க்கக் கூடாது என்று தடைசெய்யப்பட்டுள்ளனர். அதன் காரணமாக தமது பிள்ளைகளான சிவஜெயம், சுதர்சன், ஆகியோரைப்பார்ப்பதற்குமட்டக்களப்பிலிருந்துகண்டிக்கு சென்றிருந்த காசி ஆனந்தனின் வயதுசென்ற தாயார் ஏமாற்றத்துடன் அவர்களைப் பார்க்கமுடியாது ஊர் திரும்பியது குறிப்பிடத்தக்கது.

இந்த மனித உரிமை மீறல் பற்றி தேசிய அரசுப்பேரவையில் [illegible] கேள்வி எழுப்பவுள்ளார்.

### "தொழிலாள வர்க்

—2-ம் பக்கத் தொடர்

கொள்கையை நாம் கொள்கையளவில் ஆதரித்தபோதிலும் இம்மாதிரியான அடக்குமுறைச் சட்டங்களுக்கு நாம் ஒருபோதும் ஆதரவு நல்க மாட்டோம் இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு மூலகர்த்தாக்களாக விளங்கும் இப்பாட்டாளி மக்களை அடக்கி ஒடுக்கி விடுவதால் அரசு ஒருவித நன்மையும் காணப்போவதில்ல. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கீழ் இயங்கிவரும் தொழிற் சங்கங்களில் அங்கத்தவர்களாய் இருக்கும் தொழிலாளிகளுக்கும் இச்சட்டம் உரியதுதான் என்பதை தொழிலாளி முதலில் உணர வேண்டும்.

"தங்களின் பாதுகாப்பிற்காக அரசின் கீழ் அங்கம் வகிக்கும் தொழிற் சங்கங்களைச் சேர்ந்தவர்களுக்கும் பாதகமான சட்டத்தை அரசாங்கம் இயற்றியுள்ளது வேலியே பயிரை மேய்வது போலாகும். இதை அறிந்தும் தோட்டத் தொழிலாளர்கள் அச்சங்கத்தில் அங்கத்துவம் வகிப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும்ஆகவே தொழிற் சங்கங்கள் அனைத்தும் ஒன்றுபட்டு தங்கள் எதிர்ப்பைக் காட்டுவதோடு இச்சட்டத்தை உடனடியாக அரசை வாபஸ் பெறும் வண்ணம் வற்புறுத்த வேண்டும். இல்லையேல் போராட்டத்தில் இறங்கவேண்டும்.

### புத்தொளியும் போட்டியிடுகிறுர்!

9-12-75ந் திகதி நடைபெறும் வடமாநிலக் கல்வித் திணைக்கள கடன் வழங்கு சபைத்தேர்தலில் இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்க வேட்பாளர்களில் ஒருவராகத் தமிழர் கூட்டணி ஆதரவாளரான திரு. ந. சிவபாதம் (புத்தொளி)போட்டியிடுகிறுர்.

### கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் மனித உரிமை நாள்!

மனித உரிமைகள் தினம் எதிர்வரும் டிசெம்பர் 10ம் திகதி பிற்பகல் 3 மணிக்கு யாழ். றிம்மர் மண்டபத்தில் டாக்டர் ஜனகரத்தினம் தலைமையில் கொண்டாடப்படவிருக்கிறது. இவ்விழாவில் தமிழர் கூட்டணித் தலைவர்கள், பிரமுகர்கள் உரையாற்றுவார்கள். கொழும்பிலும் இதே தினத்தில் மனித உரிமை நாளைக் கொண்டாட, கொழும்பு ஆய்வுவட்டம் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

சரசுவதி மண்டபத்தில் மாலை 6 மணிக்கு நடைபெறும் இவ்விழாவில் திருவாளர்கள் சி. கதிரவேற்பிள்ளை, மூ. சிவசிதம்பரம் எம். எஸ். செல்லச்சாமி, காமினி திசாநாயகா, எட்மண்ட் சமரக்கொடி, ஜெனி டிமெல், பேனுர்ட் சொய்சா ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத்தின் பார்வையில் நாம்!

அன்பு நண்பா,

- குளிப்பதற்கு வழியில்லை—
- கோவிலுக்கு அழைத்துச்செல்லப்படுவதில்லை.
- இருட்டறைக்குள் அடைத்துவைக்கப்பட்டிருக்கின்றனர்!
- இனத்தவர், உறவினர், நண்பர்கள் சென்று பார்த்திடவும் அனுமதி மறுக்கப்படுகிறது—
- சூரியவெளிச்சம் மேனியில் பட்டு ஒரு திங்களுக்கு மேலாகிறது —
- நோயென்றால் வைத்தியரிடம் கூட அழைத்துச்செல்ல மறுக்கின்றனர்!

எதிர்வரும் டிசெம்பர் பத்தாம் நாள் உலக முழுவதும் கொண்டாடப்படும் மனித உரிமை நாளைப்பற்றி—மன்பதைக்கென உலக நாடுகள் மன்றம் வகுத்துத் தந்திட்ட மறுக்கொணுச் சொத்தான அந்தப் பிரகடனத்தைப்பற்றி—நான் சிந்தித்திருந்த வேளை கண்டிச்சிறையிலிருந்து கிடைத்திட்ட மேற்படி சேதி என் சிந்தனையைக் கலைத்து—அங்கு வாடி வதங்கிடும் நம் செல்வங்களைப் பற்றியே எண்ணிடத்தூண்டியது!

ஆம் நண்பா, கண்டிச்சிறையில் ஆண்டுக்கணக்காக விசாரணையும் விடுதலையுமின்றி அடைத்து வைக்கப்பட்டிருக்கும் நம் குலக்கொழுந்துகள்—விடுதலை வீறுகொண்ட காளைகள்— ஐவருக்கும் தான் இந்த வேதனைமிக்க நிலை! ஞானசேகரன், அமரசிங்கம், நடேசானந்தம், சுதர்சன், சிவஜெயம் ஆகிய ஐந்து வீர இளைஞர்கள் அங்கே தமிழ் சமுதாயத்தின் விடுதலைக்காக—சிறையதிகாரிகள் அநியாயமாகச் சுமத்தும் மேற்கண்ட துன்ப மூட்டைகளையெல்லாம் சுமந்து கொண்டு—கடந்த ஒரு திங்களுக்கு மேலாக இவ்வாறான அல்லல்களுக்கு மத்தியில் — உறுதி குலையாது தவம் புரிந்து வருகின்றனர் என்பதைக்கேள்வியுறும் போது இந்தநாட்டில் 'மனித உரிமைப் பிரகடனம்' எவ்வளவு தூரம் கேலிக்குரியதாக்கப்படுகிறது என்பதை உல. ம் சுலபத்தில் உணர்ந்து கொள்ளமுடியும்!

கசாப்புக் கடைக்காரன் தனது கடையில் புத்தரின் படத்தையும் மாட்டி வைத்துக் கொண்டு ஜீவகாருண்யம் பற்றிப் பேசிவருவதுபோல; 'பௌத்த நாடு' என்ற 'போர்ட்' பலகையை மாட்டிக்கொண்டுள்ள சிங்கள அரசு—ஐ நா.வின் மனித உரிமைப் பிரகடனத்தில் கைச்சாத்திட்டுள்ள சிங்கள அரசு—ஈழத் தமிழினத்தின் அடிப்படை உரிமைகளையும் சுயாதீனத்தையும் சுதந்திரத்தையும் அபகரித்தது மட்டுமல்ல; தமது சுதந்திரத்துக்கும் மனித உரிமைகளுக்குமாகப் போராடும் ஈழத்தமிழ் இளைஞனை எவ்வளவு தூரம் மனிதாபிமானமற்றமுறையில் சிறைக்குள் தள்ளிச் சித்திரவதை செய்து கொடுமைப்படுத்தி வருகிறது என்பதற்கு கண்டிச் சம்பவம் ஒரு சிறு உதாரணமாகும்! ஒரு பானை சோற்றுக்கு ஒரு அவிழ் பதம் போதுமல்லவா?

மனித உரிமைப் பிரகடனத்தை 1948ம் ஆண்டு பிரகடனப்படுத்திய ஐ. நா. மன்றம்—அந்தப் பிரகடனத்தில் கையொப்பமிட்டுள்ள நாடுகள் அவற்றை மீறும்போது, அதைத் தட்டிக் கேட்டிட தடுத்து நிறுத்திட எதுவித வழிவகையையும் வைக்காமற்போனதுதான் ஐ. நா. மன்றம் விட்ட பெரும் பிழையாகும். அதனுல்தான் மனித உரிமைப் பிரகடனம் என்பது இன்றைக்கு இலங்கையுட்பட பல்வேறு நாடுகளிலும் கேலிக் கூத்தாக்கப்படும்போது—புறக்கணிக்கப்படும்போது — குழிதோண்டிப் புதைக்கப்படும்போது — ஐ, நா. சபையினுல் அவற்றைப் பார்த்தும் பாராததுபோல கையைக் கட்டிக்கொண்டு பேசாமலிருக்க முடிகிறதே தவிர—அந்தப் பிரகடனத்துக்கு உயிர் கொடுப்பதற்கு எவ்வித முயற்சியையும் எடுக்க முடியவில்லை! எனவேதான் மனித உரிமைப் பிரகடனம் என்பது ஈழத்தமிழினத்தைப் பொறுத்தவரை வெறும் ஏட்டுச் சுரைக்காயாக இருக்கிறதே தவிர — கிஞ்சிற்றும் பயன் தருவதாக இல்லை!

தானே ஏற்றுக்கொண்ட மனித உரிமைக் கோட்பாடுகளுக்கு முற்று முரணுக தமிழனின் சுதந்திரத்தை முற்றுக மறுத்து—தமிழ் தேசிய இனத்தின் தனித்துவத்தை அழித்து ஒழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் சிங்கள அரசு—உலக மேடைகளில் நின்று மனித உரிமைகளுக்காகவும் பல்வேறு நாடுகளில் நடைபெற்று வரும் விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவாகவும், இதோபதேசம் புரியும் கபடத்தனத்தைக்கண்டு உலகம் கைகொட்டி நகைத்திடும் காலம் விரைந்து வந்து கொண்டிருக்கிறது!

உலக நாடுகள், இலங்கை அரசின் இரட்டை நாக்கையும்—தமிழ் ஈழத்தின் விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு அது மேற்கொண்டு வரும் மிலேச்சத்தனமான நடவடிக்கைகளையும்—அது பின்பற்றிவரும் மோசமான "இனக்கொலை" நடவடிக்கைகளையும் ஊன்றிக் கவனித்தபடிதான் இருந்து வருகின்றன, என்பதை இருநாடுகளின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் பேசும் போது கூறியிருக்கும் சில கருத்துக்கள் மறைமுகமாக நமக்கு எடுத்து உணர்த்துகின்றன!

**"உலகத்தில் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் சகல மக்களுக்கும் சோவியத்அரசு உதவியும் ஊக்கமும் அளித்து வருகிறது.** வியட்நாம் யுத்தத்தில் விடுதலைக்காகப்போராடிய வியட்னும் மக்களுக்கு சோவியத் சகல உதவிகளையும் அளித்தது; அராபிய மக்களின் நியாயமான போராட்டத்துக்கும் 'சோவியத்' பல விதத்திலும் உதவி செய்து வந்திருக்கிறது; சோவியத் மக்கள் என்றும் இலங்கை மக்களுக்கும் உதவி செய்யத் தயாராக இருக்கிறுர்கள்!"

நண்பா, இதைக் கூறியவர் சோவியத் நட்புறவு சம்மேளனத்தின் துணைத் தலைவர் திரு. லின்டோஸ்கி; கூறிய இடம் யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற அக்டோபர் புரட்சி நினைவுதினக் கூட்டத்தில்; கூடியிருந்தோர் பெரும்பாலும் தமிழர்கள்.

ஆதாரம் ஈழநாடு (17—11—75)

இப்படிக்கூறும்போது திரு. லின்டோஸ்கியின் உள்ளத்தில் ஈழத்தமிழர்கள் நடத்திவரும் விடுதலைப்போராட்டம் பற்றிய நினைவுகள் எழுந்திருக்காமலா இருந்திருக்கும்? உலகத்தில் விடுதலைக்காகப்போராடிக்கொண்டிருக்கும் சகல மக்களுக்கும் உதவியும் ஊக்கமும் அளித்து வருவதாக கூறும் சோவியத் அரசு — ஒரு கட்டம் வரும்போது ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கும் கைகொடுக்கும் என்று நாம் எதிர்பார்ப்பதில் என்ன தவறு? அப்படிக் கைகொடுக்கும் என்பதைத்தான் யாழ்ப்பாணத்தில் வைத்து மேற்கண்டவாறு மறைபொருளாக திரு, லின்டோஸ்கி கூறிவைத்தாரோ என்னவோ யாருக்குத்தெரியும்? ஏனெனில் விடுதலைக்காக இன்று போராடிவரும் 'இலங்கை மக்கள்' இலங்கைத் தமிழர்கள் மட்டும் தானே?

இதே போலத்தான் மற்றேர் வெளிநாட்டு தூதர்—ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் தென் கிழக்காசிய விசேட தூதர் — திரு. சொய்சர் என்பார் அளவெட்டியில் பேசும்போது பின்வருமாறு கூறியிருக்கிறுர்—

> 'ஜெர்மன் ஜனநாயகக் குடியரசைப் பொறுத்தவரை அங்கு ஒரே யொரு தேசிய சிறுபான்மை இனமே உண்டு. 'சோவிஸ்' எனப்படும் அந்த இனத்திற்கு எவ்வித பாகுபாடுகளும் காட்டாது பெரும்பான்மை இனத்திற்குள்ள சகல உரிமைகளும் அந்த இனத்துக்கும் உறுதிப் படுத்தப்பட்டு சமத்துவ அடிப்படையில் வாழ்ந்து வருகிறேம். அந்த இனத்தின் வளர்ச்சிக்காக தனிப்பட்ட பாடசாலைகளும், கலை கலாச்சார வளர்ச்சிக்கான வாய்ப்புக்களும் ஏற்படுத்திக்கொடுக்கப் பட்டுள்ளதுடன், அவர்களுக்கெனத்தனியான பாராளுமன்றம் ஒன்று கூட உண்டு"

(ஈழநாடு 19-11-75)

இவ்வாறு தமது நாட்டில் சிறுபான்மை இனத்துக்கு அளிக்கப்பட்டுள்ள பெருமைக்குரிய இடத்தைப் பற்றி அவர் உயர்த்திப் பேசியதன் பொருள்—சிங்கள அரசு பின்பற்றி வரும் சிறுபான்மை இன ஒடுக்கல் கொள்கையையும், பெரும்பான்மை சிங்கள வெறியையும் கண்டிப்பது போலத்தானே அமைந்திருக்கிறது; இரண்டு இனங்கள் மட்டுமேயுள்ள உங்கள் நாட்டில் நீங்கள் சிறுபான்மை இனமாகிய தமிழ் இனத்தை நசுக்குகிறீர்கள்; நாங்களோ எங்கள் நாட்டில் சிறுபான்மையினருக்கு சம உரிமைகளும் சொந்த ஆட்சியும் அமைத்துக்கொடுத்திருக்கிறேம்—என்பதைத்தான் இலங்கை அரசுக்கு அவர் மறைமுகமாக இடித்துக்கூறியிருக்கிறுர்!

எனவே நண்பா, ஈழத்தில் நடைபெற்று வரும் இன ஒடுக்குதலும் அதை எதிர்த்து தமிழன் நடத்திவரும் விடுதலைப்போராட்டமும், இன்று உலக நாடுகளின் கண்களுக்கு சரிவரத்தெரிய ஆரம்பித்துவிட்டன. சிங்கள ஏகாதிபத்திய ஆட்சி, என்னதான் இரும்புத்திரைபோட்டாலும் — தனது சர்வாதிகாரக் கொடுமையையும், அதை எதிர்த்து தமிழன் நடத்திவரும் விடுதலைப்போரையும் இனியும் மறைத்துவிடமுடியாது!

சிங்களம் மட்டும் என்ற கொள்கையால்—தமிழர்களை ஒதுக்குவதால் இந்த நாடு இரண்டாகப் பிரியும்—ஒரு நாள் தனித்தமிழ் இராச்சியம் உதயமாகும் என்பது 1956ம் ஆண்டே சிங்களத் தலைவர்களுக்குத்தெரியும்! தெரிந்து கொண்டுதான் அவர்கள் அன்று நாட்டைப் பிரித்திடக் கால்கோள் இட்டார்கள். அப்போது டாக்டர் என். எம் பெரேரா பாராளுமன்றத்தில் பின்வருமாறு கூறினார்:—

"May I ask them in all earnestness, in all seriousness what do you expect the minorities to do—sit down with folded arms? Do you want them to say "very well you have decided we will sit down and humiliate ourselves"

—HANSARD (Volume 24—Col. 1871—14-6-1956)

"நான் உங்களைக்கேட்கும் முக்கியமான கேள்வி இதுதான்—சிறுபான்மையினர் என்ன செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்? கைகட்டிக்கொண்டு அவர்கள் சும்மா இருக்க வேண்டுமென்று? "நீங்கள் முடிவெடுத்துவிட்டீர்கள் — நல்லது இனி நாங்கள் பேசாமலிருந்து எங்களை நாங்களே தாழ்த்திக் கொள்வோம்"—என்று சிறுபான்மையினர் கூறவேண்டும் என்பதா உங்கள் எண்ணம்?"

டாக்டர் என். எம். பெரோ இப்படிக் கூறிட — மற்றேர் சமசமாஜத் தலைவரான லெஸ்லி குணவர்த்தன அதே பாராளுமன்றத்தில பின்வருமாறு கூறியிருந்தார்!—

"There is grave danger of the division of the country we must remember that the northern and eastern provinces of Ceylon are inhabited principally by Tamil speaking people, and those people feel that a grave and irreparable injustice is done to them. there is a possibility of their deciding even to brake away from the rest of the country."

"நாடு பிளவுபடும் அபாயம் இன்று தோன்றியுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்களே பெரும்பான்மையினராக வாழுகிறுர்கள். அவர்கள் தங்களுக்கு பயங்கரமான பெரிய அநீதி இழைக்கப்பட்டுவிட்டதாக உணருகிறுர்கள். இதை நாம் உணரவேண்டும். ஏனைய நாட்டிலிருந்து தனியே பிரிந்துபோகும் முடிவுக்கும் அவர்கள் வரக்கூடிய சாத்தியம் உண்டு!"

## அரசியல் மேடை

புதிய அரசியல் சட்டத்தைக் கொண்டு வந்ததன் மூலம், தமிழர்களைப் பிரிவினைப் பாதையில் செல்லவைத்த டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, அன்று 1956ம் ஆண்டு பாராளுமன்றத்தில் பின்வருமாறு அழுத்தந்திருத்தமாகக் கேட்டார்:—

"Do we want a single state? or do we want two? Do we want one Ceylon or do we want two?"

"ஒரு நாட்டை நாங்கள் விரும்புகிறேமா அல்லது இரண்டு நாடுகளை நாம் நாடுகிறேமா? ஒரு இலங்கை வேண்டுமா? அல்லது இரண்டு இலங்கை வேண்டுமா?"

இவ்வாறு சிங்களம் மட்டும் சட்டம் வந்தபோதே இலங்கை இரண்டு நாடுகளாகும் என்பதை பாராளுமன்றத்தில் அனுபவமுள்ள சிங்களத் தலைவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறுர்கள். இந்த உண்மைகளை நம்முடைய நவம் அண்ணனும் தேசிய அரசுப்பேரவையில் பேசும் போது அழகாக எடுத்துக்காட்டியிருந்தார்!

ஆக — சிங்களவர்கள் நாட்டுப் பிரிவினையை 1956ம் ஆண்டே எதிர்பார்த்திருந்தார்கள்! நாம் தான் அந்த இலட்சியத்தை சென்றடைவதில் ஏறத்தாழ 20 ஆண்டுகள் பின்தங்கி விட்டோம்! இன்று ஒரே குரலில் ஒரே சிந்தனையில் 'தனிநாடு' எனும் விடுதலை முழக்கத்தை தமிழ்த் தேசிய இனம் முன் வைத்து அதற்காகப் போராடி வருகிறது! நியாயத்துக்கும் நீதிக்குமாகப் போராடிவருகிறது!

இவ்வேளையில் பரிசுத்த போப் ஆண்டவர் தெரிவித்திருந்த ஒரு கருத்தும் நம் சிந்தனைக்குரியது—

"உங்களுடைய ஆயுதங்களை அடக்குமுறைகளுக்கும் அழிவுப்பாதைகளுக்கும் பயன்படுத்தாதீர்கள்! எங்கும் எப்பொழுதும் எந்தவேளையிலும் நீதியையும் அமைதியையும் நிலைநாட்ட அவற்றைப் பயன்படுத்துங்கள்!"

என்பதே பாப்பரசர் தந்திட்ட உபதேசமாகும்—நம்மை நசுக்க முயலும் சிங்கள அரசுக்கும் இதில் பாடம் இருக்கிறது — நீதிக்காகப்போராடும் நாம் படிக்கவேண்டிய பாடமும் இதில் புதைந்து கிடைக்கிறது! திருப்பித் திருப்பிப்படித்துப்பார்! பாப்பரசரின் போதனையில் பொதிந்து கிடக்கும் பொருள் விளங்கும்! உண்மை புரியும்!

உன் அன்புத் தோழன்.

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை மருந்து

## இளங்கன்று...

"கொக் கொக் கொக்... கொக்..." தாய்க்கோழியின் அழைப்பைக் கேட்டு அதன் குஞ்சுகள் இரை தேடித் தாயின் காலடியை நோக்கிப் பாய்கின்றன.

குழந்தைகளின் பசியை அகற்றி அவர்களை வளரவைத்து ஆளாக்கும் பொறுப்பை யாரும் கூறித் தாய் ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. பலனை எதிர்பார்க்காமல் கடமையைச் செய்யும் கோழி, குஞ்சுகளின் உயிரைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பையும் உணர்ந்தபடியால் இரைதேடும் வேட்டையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போதே அங்கும் இங்கும் மேலும் கீழும் தன் கண்ணோட்டத்தைச் செலுத்துகிறது.

ஆகாயத்தில் ஒரு பருந்து வட்டமிட்டுப் பறந்து வருவது புலப்பட அடுத்த கணம் "கோக்கி" என உரத்த குரலில் ஒரு எச்சரிக்கை அதன் வாயிலிருந்து புறப்பட அதைச் செவியுற்ற குஞ்சுகள் மறைவிடங்கள் தேடி ஓடிப் பதுங்குகின்றன.

தாய் எச்சரிப்பதும் கோழைகள்போல் குஞ்சுகள் பதுங்குவதும் சில குஞ்சுகளுக்குப் பொறுக்கவில்லை. அவை தாயை வைதன, இளம் குஞ்சுகளைக் கோழைகளாக்குவதாகப் புகார் கூறின "நமக்கும் இறக்கை உண்டு, பறக்க வலுவுண்டு, போராடச் சொண்டுண்டு" எனப் போர் முழக்கஞ் செய்யத் தொடங்கின, தன்னிச்சையாக நடமாடின.

"கற்றது கைமண்ணளவு, கல்லாதது உலகளவு, பெரியவர்களின் சொற்கேட்டு நடப்பதே நன்மை பயக்கும்" எனத் தாய்க்கோழி எவ்வளவோ கூறியும் செவிமடுக்காத சில குஞ்சுகள் பருந்துகளுக்கும் வல்லூறுகளுக்கும் இரையாகின.

"எவ்வளவுதான் நாம் கற்றுக்கொண்டாலும் கற்றுக்குட்டிகள் கற்றுக்குட்டிகளே; எப்போதும் தாய்போன்ற தலைவர்களின் ஆலோசனைப்படி நடந்துகொள்வதே நன்மைதரும்" என்ற தாய்க் கோழியின் அரவணைப்பில் தப்பிய குஞ்சுகள் அகமகிழ்ந்திருந்தன.

—அனந்ததேவன்.

# 'தனிநாடு' சிந்தனையை உருவாக்கிய காரணிகள்!

## தேசிய அரசுப் பேரவையில் நவம் எழுச்சி முழக்கம்!



"நேற்று உரையாற்றிய கௌரவ காங்கேசன்துறைப்பிரதிநிதிஅவர்கள் — இந்த நாட்டின் தமிழ் மக்களின் உரிமைக் குரலாக இயங்குகின்ற எமது தலைவர் மூதறிஞர் செல்வநாயகம் அவர்கள் —சில கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். இந்த அடிப்படையிலே நானும் சில கருத்துக்களை எடுத்துரைக்க விரும்புகிறேன்.

சென்ற மாதம் எனது நண்பன் உடுவில் பிரதிநிதி திரு. வி. தருமலிங்கம் அவர்கள் இத்தச் சபையிலே கேட்ட கேள்வியொன்றுக்கு பிரதம மந்திரி அவர்கள் பதிலளிக்கையில் வட இலங்கையில் இருக்கும் இளைஞர்களின் மனநிலை சூழ்நிலை பற்றி எடுத்துக்கூறினர். தமிழ் இளைஞர்கள் என்ன காரணத்துக்காக அத்தகைய மனோநிலையில் இருக்கின்றார்கள் என்பதைஆராய வேண்டிய பொறுப்பு நாட்டை ஆளுகின்றவர்களுக்கு உரியது. இன்று எமது நாட்டிலே இருக்கும் நிலையைப் பற்றி பத்திரிகை நிருபர்களுக்கு அறிக்கை விடுத்த பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் துணை அமைச்சர் திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி அவர்கள் "வடபிரதேசத்தில் எத்தனையோ இளைஞர்கள் அரசியல் நோக்கங்களை அடிப்படையாக வைத்து எத்தனையோ வன்செயல்களில் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்று எடுத்துக் கூறினர். அந்த நிலை எப்படி ஏற்பட்டது என்பதை ஆராயவேண்டிய பொறுப்பு இந்த நாட்டின் பிரதமருக்கு இருக்கின்றது. ஏதாவது சந்தேகங்கள் இதுபற்றி இதுவரை எவருக்காவது இருந்திருந்தால் நேற்று இந்தப் பேரவையிலே உரையாற்றிய எமது தானைத்தலைவன் மூதறிஞர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் ஆற்றிய உரை போக்கியிருக்கும். அவர் தமிழ் மக்களுடைய சிந்தனை எந்தத் திசையில் போய்க் கொண்டிருக்கின்றதென்பதைப்பற்றி நேற்று அவர் திட்டவட்டமாக தெளிவாக இந்தப்பேரவையிலே எடுத்துக் கூறினர். இந்த நிலையிலே கொஞ்ச நேரம் இந்தப் பயங்கரமான விரும்பத்தகாத சூழ்நிலை எப்படி ஏற்பட்டது என்பதை ஆராய வேண்டியது மிகவும் பிரயோசனத்தை அளிக்கும் என்று கூறிவைக்க விரும்புகிறேன்.

### ஆண்ட பரம்பரை நாம்

ஒரு மாதத்திற்கு முன்னர் அந்நிய நிறுவனங்களுக்குச் சொந்தமான தேயிலை இறப்பர் தோட்டங்களைத்தேசியமயமாக்கிய பின்னர் கண்டியிலே ஒரு பெரிய வைபவம் நடைபெற்றது. அந்த வைபவத்தில் இந்த நாட்டை ஆண்ட கடைசிக்கண்டிய மன்னனின் கொடி கொடிக்கம்பத்தில் ஏற்றிப் பறக்க விடப்பட்டது. இந்த நாட்டின் சரித்திரத்தில் ஒரு பகுதியை நாம் மறக்கப்படாது. ஒழிக்கவும் படாது. கண்டி மாநகரிலே கடைசிக் கண்டி மன்னனின் கொடி பறக்க விடப்பட்டபோது முன்பு கண்டிய ராச்சியமாக எது இருந்ததோ அந்த இராச்சியத்தின் எல்லோருடைய உள்ளமும் சந்தோசப்பட்டிருக்கும். எந்தக்கட்டத்திலும் கண்டிய ராச்சியத்தின் கீழ் இருக்காத நாங்கள் இந்த நேரத்தில்தான் எங்களுக்கும் ஒரு கொடி இருந்ததே எங்களுக்கும் அன்று ஒரு இராச்சியம் இருந்தது; எங்களுக்கும் ஒரு மன்னன் இருந்தானே அந்தக்கொடி எங்கே? அந்தக்கொடி பறக்காதா? என்ற கருத்துக்கள் எங்களுக்கும் வராமலிருக்க முடியாது. அந்தக் காரணத்துக்காகத் தான் இந்த நாட்டிலே இன்றைக்கு இங்கே வாழுகின்ற தமிழ் மக்களுடைய அரசியல் உரிமை என்ன அடிப்படையிலே இருக்கவேண்டுமென்று ஆராய்வதற்கு எமது சரித்திரத்தைப் பற்றிக் கொஞ்சம் படிக்கவேண்டும்.

### தமிழரசின் வீழ்ச்சி

ஆரம்பத்திலே போர்த்துக்கீசன் வந்தான், வர்த்தகம் செய்வதற்காக; தன் வர்த்தகத்தைச் சிறப்பாகச் செய்யவேண்டுமென்ருல் எமது சுதந்திரத்தைப் பறித்து எம்மை அடிமையாக்கிஞல் தான் தனது வர்த்தகத்தை உயர்த்தலாம் என்று கருதி ஆரம்பத்திலேயே கோட்டை இராச்சியத்தையும் அதற்குப் பிறகு யாழ்ப்பாண இராச்சியத்தையும் கைப்பற்றிஞன். எமது மன்னன் சங்கிலியன் போர்க்களத்திலே தனது நாட்டு மக்களின் சுதந்திரத்தை இழந்தான். அதற்குப் பிறகு வந்த ஒல்லாந்தன் போர்த்துக்கீசனிடமிருந்து அந்த நாடுகளைப் பெற்றுன். அதற்குப் பிறகு ஆங்கிலேயன் வந்தான். ஆங்கிலேயன் எங்களையும் கோட்டை மன்னனின் இராச்சியத்தையும் ஒல்லாந்தனிடமிருந்து பெற்றுக்கொண்டு கண்டி இராச்சியத்தையும் கடைசியாகக் கைப்பற்றிக்கொண்டான். கொஞ்சக்காலமாக போர்த்துக்கீசன், ஒல்லாந்தன் தமிழ் இராச்சியத்தைப்பிறிம்பாகவும் கண்டி இராச்சியத்தைப் பிறிம்பாகவும் அரசாண்டான். அதற்குரிய நிருவாகம் பிறிம்பாக இருந்தது. ஆங்கிலேயன் கண்டியைக் கைப்பற்றியதற்குப் பிறகும் நிர்வாகம் பிறிம்பாகவே இருந்தது. கடைசியாக நிருவாகத்தின் வசதிக்காக மட்டும் இந்த மூன்று இராச்சியங்களையும் ஒன்ருக ஒரு நிருவாகத்தின் கீழ் கொண்டு வந்திருக்கிருர்கள். அதற்குப் பிறகு ஆங்கிலேயன் எங்களுக்குச்சுதந்திரம் கொடுத்துத் தானுக விலகிய பொழுது இந்த நாட்டிலே வாழுகின்ற அத்தனைபேருக்கும் சுதந்திரம் கிடைத்துவிட்டது என்று நாம் மகிழ்ந்தோம்.

ஆங்கிலேயன் போகும் பொழுது அந்நியர் இந்த நாட்டைக் கைப்பற்றும் பொழுது என்ன அடிப்படையிலே நாம் இருந்தோமோ அந்த நிலைமைதான் தர்க்கரீதியாக ஏற்பட வேண்டுமென்ற கருத்து இருந்தாலும் — இரு நூற்ருண்டாக ஒரு நாடாக அமைந்து விட்டோமே ஆகவே தொடர்ந்தும் அந்த அடிப்படையிலே இருக்கலாம் என்ற கருத்தோடு இருந்தோம்.

### உரிமை பறிப்பு

1947ஆம் ஆண்டுக்குப் பிறகு படிப்படியாக எமக்கு ஏமாற்றம் தான் கிடைத்தது. முதலிலே ஆங்கிலேயன் [illegible] ஏற்று நாடு முழுவதும் ஒன்ருக இருக்கவேண்டுமென்று கருதியவர்கள் ஆங்கிலேயன் இந்நாட்டின் வளர்ச்சிக்காக இங்கே கொண்டு வந்து தென் இந்தியத் தமிழ் மக்களுக்கு—பரம்பரையாக இந்நாட்டுப் பிரஜைகளாக இருந்தவர்களுக்கு — இந்நாட்டிலேயே தாம் இருக்க வேண்டும். உழைக்கவேண்டும், இறக்கவேண்டும் என்ற கருத்தோடு இருந்தவர்களுக்கு அவர்களுடைய பிரசாவுரிமையை அகற்றினர்கள். புதிய பிரஜாவுரிமைச் சட்டங்களைக் கொண்டு வந்தார்கள்,

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பூரண தமிழ்ப் பிரதேசங்களாக இருக்கக் கூடாது என்ற அடிப்படையிலே தமிழ்ப் பிரதேசங்களிலே திட்டமிட்டுக் குடியேற்றப்பட்டு முன்பு பூரணமாகத் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்த கந்தளாய், அம்பாறை போன்ற இடங்கள் இன்று என்ன நிலையில் இருக்கின்றனவென்பதை நீங்கள் அறிவீர்கள். அதற்குப் பிறகு ஆங்கிலேயன் என்ன இடத்திலே இருந்தானே அந்த இடத்துக்குச் சிங்களமொழியைக் கொண்டுவர வேண்டும் என்ற கருத்து ஏற்பட்டது. ஒரு நாட்டை யார் ஆளுகின்ருர்கள் என்று பார்க்கும்பொழுது அந்த நாடு எந்த மொழியிலே ஆளப்படுகிறதோ அந்த மொழி பேசுகிறவன்தான் அந்த நாட்டை ஆளுவான் ஆளுகின்ருன் என்று அர்த்தம்.

### மொழி ஆதிக்கம்!

பிரஞ்சுக்காரன் ஒரு நாட்டை ஆண்டால் அவன் பிரஞ்சு மொழியில் ஆள்வான். ஆங்கிலேயன் ஒரு நாட்டை ஆண்டால் அவன் ஆங்கில மொழியில் ஆள்வான். இந்த அடிப்படையில் முதலாவதாகக் கொண்டு வரப்பட்ட மொழிச்சட்டம், எங்கே ஆங்கிலம் என்ற சொல் இருந்ததோ அங்கே சிங்களம் என்ற சொல்லைக் கொண்டிருந்தது.

English shall be replaced with Sinhala as the official language.

எனவே எஜமானனுடைய மொழியாக 1956ஆம் ஆண்டிலே சிங்களம் புகுத்தப்பட்டது. அவ்வளவு காலமும் இந்நாட்டிலே தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சகோதரர்களாக, சமத்துவம் உள்ளவர்களாக இருந்தார்கள். ஆங்கிலத்தை உதறித்தள்ளிவிட்டு தங்கள் மொழிக்கே முதலிடம் கொடுக்க வேண்டுமென்ற கருத்துடன் 1956ஆம் ஆண்டு ஆங்கிலத்தை அகற்றி அந்த இடத்துக்குச் சிங்களத்தைக் கொண்டுவந்தார்கள். இந்த அடிப்படையிலே பார்த்தால் தமிழ்மக்கள் இந்நாட்டிலே சிங்கள மக்களுடன் சேர்ந்து இந்நாட்டை ஆளவில்லை, ஓர் ஆளப்படும் இனமாக அவர்கள் மாற்றியமைக்கப்பட்டு விட்டார்கள் என்ற நிலை ஏற்பட்டதைக் காண்கிருேம்.

### அரசியல் நிர்ணயசபை

கடைசியாக, நடந்த எல்லாவற்றையும் மறந்து, போனது போகட்டும்; இந்நாட்டு மக்களின் அபிலாசைகளை எடுத்துரைக்கும் ஒரு புதிய அரசியல் அமைப்பை உண்டாக்குவோம் என்று பிரதமர் பிரதிநிதிகள் சபையிலிருந்தஉறுப்பினர்களுக்கு ஓர் அழைப்பு விடுத்தார். உறுப்பினர்கள் அத்தனை பேரும் அந்த அழைப்பை ஏற்று, அரசியல் நிர்ணய சபையில் பங்கு பற்றினர்கள். நாமும் "இவ்வளவு காலமும் எவ்வளவு அக்கிரமம் நடந்தாலும் பரவாயில்லை, இனியாவது இந்நாட்டிலே கௌரவமாக சுயமரியாதையாக, இது எமது நாடு என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஒரு புதிய அரசியல் அமைப்பை உண்டாக்குவோம் என்று கருத்தோடு அதிலே பங்கு பற்றினேம். இந்த அரசியல் நிர்ணய சபையில் நடந்தது என்ன என்பதைப் பற்றி, சபாநாயகர் அவர்களே, அதற்குத் தலைவராக இருந்த உங்களுக்குத் தெரியும்.

எங்கள் அடிப்படைக் கருத்துக்கள் நிராகரிக்கப்பட்டன. எனவே, அங்கிருந்து வெளியேறினேம். அப்படியிருந்தும் தமிழ் மக்களிற் சிலர், எமது மொழிக்கு இடம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை, அரசியல் சட்டத்தில் எமக்கும் எம்முடைய பிள்ளைகளுக்கும் குடியுரிமை மறுக்கப்பட்டாலும் பரவாயில்லை, இந்நாட்டிலே நாம் ஏதாவது தொழில் செய்து சீவித்தால் போதும் என்று நினைத்தார்கள். அந்த அடிப்படையில் தாங்களும் இந்நாட்டைச் சேர்ந்து ஆள்கின்ருேம் என்ற தப்பான கருத்துடன் இருந்தவர்களுக்கு இந்த அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள் அவர்களுடைய கண்களைத் திறக்க வைத்தன.

### தரப்படுத்தல்

முதன் முதலாக 1970ஆம் ஆண்டு அம்மாவின் தலைமை

—8ம் - பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# சூரியரின் 'மாடிவீட்டு சோசலிசம்'

**நான்** பிறவியிலேயே ஒரு சோசலிஸ்ட். கண்டி வீதியில், காலி வீதியில் அழகான மாடி வீடுகளிலும் கறுவாத் தோட்டத்தில் அழகான மாடி வீடுகளிலும் இருக்கின்றவர்கள் மாடிவீட்டுச் சோசலிசம் பேச முடியுமாக இருக்கும் போது ஏழையாகப் பிறந்து, ஏழையாக வளர்ந்து, மூன்றும் மூன்றுமாக ஆறு கட்டை நடந்து சென்று கல்வி பயின்று, ஏழை மக்களோடு வாழும் என்னைப் போன்றவர்கள் சோசலிசம் பேசினால் வேடிக்கையாக இருக்கின்றதென்றார் தபால் தந்திப் போக்குவரத்து அமைச்சர். ஐக்கிய தேசியக் கட்சியோடு தமிழரசுக் கட்சியையும் இணைத்து, "இவர்களும் சோசலிசம் பேசுகிறார்கள், இதுதான் வேடிக்கையாக இருக்கின்றது" என்று அவர் கூறுகிறார். எது வேடிக்கை? குமாரசூரியர் போன்றவர்கள் சோசலிசம் பேசுவதைப் பார்க்கும்போது வேடிக்கையாக மட்டுமல்ல, வேதனையாகவும் இருக்கின்றது.

நாங்கள் ஏழைகளாகப் பிறந்தவர்கள். எங்களுக்குத் தெரியும் ஏழை எவ்வாறு கஷ்டப்படுகிறான் என்பது. நாங்கள் ஏழைகளோடு வாழ்ந்தவர்கள்; வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். எங்களுக்குத் தெரியும் ஏழைக்கு எவ்வாறு பசிக்கும் என்று ஓலைக் குடிசைகளில் வாழ்கின்ற எங்களுக்குத் தெரியும் ஏழைகளுடைய நிலை எவ்வாறு இருக்கிறது. என்று; இவர்களுக்குத் தெரியாது. இவர்கள் சோசலிசம் பேசுகிறார்கள்.

## மாடிவீட்டு சோசலிசம்

மாடிவீட்டுச் சோசலிசம் பற்றிச் சில வார்த்தைகள் அல்ல, முதலாளிகளின் அடிவருடிகள் என்று கூறுகிறவர்களைப் பற்றி சில வார்த்தைகள் கூறவேண்டும். அண்மையில் இந்தப் பெரிய மனிதர் மன்னார், வவுனியாப் பகுதிகளுக்கு அரசியல் அதிகாரியாக நியமிக்கப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். பலாலி விமான நிலையத்திலிருந்து மன்னார் ஏறக்குறைய 180 கட்டைக்கு அப்பால் இருக்கிறது. அரசியல் அதிகாரியாக அண்மையில் நியமனம் பெற்ற அந்தப் பெரிய மனிதர் இங்கிருந்து பலாலிக்குப் போய் 180 கட்டையை ஒரு வாகனத்தில் தாம் மட்டும் பிரயாணம் செய்வாராக இருந்தால் 200 ரூபா பெற்றோல் செலவோடு அரசியல் அதிகாரியின் விஜயம் முடிந்திருக்கும். இந்த அரசியல் அதிகாரிக்கு தாம் மட்டும் ஜீப்பில் போனால் போதாது; பரிவாரங்களும் கூடச் செல்ல வேண்டும். அங்கே போய் இறங்குகிற நேரத்திலே அவரை வரவேற்பதற்காக கூடச் செல்பவர்கள் 100 பேராவது நின்றால்தான் அவருக்கு ஒரு திருப்தி.

பலாலி விமான நிலையத்திலிருந்து அமைச்சருக்கு வாகன ஊர்வலம் சென்றதாம். ஏறக்குறைய 3,000. 4,000 ரூபா பெற்றோலுக்கு மட்டும் செலவாயிருக்கும். இதற்குப் பொறுப்பாளி யார்? இந்த நாட்டில் வாழும் ஏழை மக்களுக்குச் சில சலுகைகளைச் செய்ய நீங்கள் தயாராக இல்லை. நாட்டுக்காக உழைக்கின்ற விவசாயிகளுக்கு பென்சன் கொடுக்கச் சொன்னால் சிரிக்கிறீர்கள். ஆனால் அந்த அரசியல் அதிகாரி 180 கட்டையை 10, 20 வாகனங்களோடு போயிருக்கும் நிலையிலே ஒரு வாகனத்துக்கு பெற்றோலுக்கு மட்டும் 200 ரூபா செலவு செய்யப்படுமாயிருந்தால் அவருடைய விஜயம் அரசாங்கத்துக்கு எத்தனை ஆயிரம் ரூபா செலவை ஏற்படுத்தியிருக்கும் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். இதில் ஒரு கட்டுப்பாடு வேண்டும்.

## ஏழைகளின் பணம் பாழ்

இத்தனை ஆயிரம் ரூபா செலவில் ஏதாவது பிரயோசனம் இருக்கிறதா? இன்னும் ஒரு வேடிக்கை, சென்ற ஞாயிற்றுக்கிழமை நான் பஸிலே நின்றேன். பரிவாரங்களோடு மன்னாருக்கு விஜயம்செய்த அரசியல் அதிகாரி திரும்பிக்கொண்டிருக்கிறார்; பஸிலே பார்த்தேன். கிளிநொச்சியிலுள்ள ஓர் ஆசிரியர் தன்னந்தனியாக ஒரு ஜீப்பிலே போய்க் கொண்டிருக்கிறார். இவரை வழியனுப்ப காணி ஆணையாளர் திணைக்களத்தைச் சேர்ந்த ஜீப். இது என்ன இவர்கள் குஞ்சியப்பன் வீட்டு ஜீப்பா? இவர்களுடைய சீதனமா? இந்த நாட்டில் வாழும் ஏழை மக்களின் சொத்தைச் சரியாகச் செலவு செய்யுங்கள் என்றுதான் கேட்கிறேன்.

## பண்டா கொள்கை என்றால் என்ன?

எதற்கெடுத்தாலும் பண்டாரநாயக்க கொள்கை: ஒரு வேடிக்கையாகப் போய்விட்டது, பண்டாரநாயக்கவுக்கு ஒரு கொள்கை இருந்ததா என்று கேட்க விரும்புகிறேன். ஒரு காலத்திலே, காலஞ்சென்ற பண்டாரநாயக்க அவர்கள் ஒரு சோசலிசவாதியாக, ஒரு சமதர்மவாதியாக இருந்ததை நாம் மறக்கவில்லை. இந்த நாட்டிலே சிங்கள மக்களும் தமிழ் மக்களும் சம உரிமை பெற்று வாழ வேண்டும் என்று சமதர்மம் பேசிய பண்டாரநாயக்கவை 1955 ஆம் ஆண்டோடு நாங்கள் மறந்து விட்டோம்.

ஐக்கிய தேசி[illegible] எந்த மொழிக் கொள்கையைக் கொண்டிருந்ததோ அதே மொழிக்கொள்கையைக்கொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி — காலஞ்சென்ற பண்டாரநாயக்காவின் கட்சி—என்று 24 மணித்தியாலத்தில் தனிச் சிங்களத்தை இந்த நாட்டின் தேசிய மொழி ஆக்குவோம் என்று கூறினார்களோ அன்றே பண்டாரநாயக்காவின் சமதர்மமும் போய்விட்டது; திரு. பண்டாரநாயக்க அவர்களின் ஜனநாயகம் இன்று போய்விட்டது.

## முதல் அடி

இந்த அரசாங்கம் எத்தனையோ முற்போக்குத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது என்று திரு. செல்லையா குமாரசூரியர் அவர்கள் கூறுகின்றார்கள். இவர் செய்த முற்போக்குத் திட்டங்கள் என்ன? பாடசாலைகளை அரசாங்கம் தேசியமயமாக்கியபோது நான் சமசமாசக் கட்சியில் இருந்தேன். இந்த நாட்டு ஏழை மக்களுக்கு ஒரு நல்ல காலம் வரப்போகின்றது என்று நான் அப்போது நம்பினேன். கிராமப்புற மக்களுக்கும் பட்டினத்து மக்களைப்போல சர்வகலாசாலைப் படிப்புக்கு வசதி கிடைக்கப் போகின்றதென்று மகிழ்ச்சி கொண்ட நான் அன்றைய தமிழரசுக் கட்சியினரை இனத்துரோகிகள், தொழிலாளர் வர்க்கத்தின் துரோகிகள் என்று வர்ணித்தேன்.

கடைசியாக நடந்தது என்ன? என்று அரசாங்கம் பாடசாலைகளை தேசியமயமாக்கியதோ அன்று விழுந்தது தமிழினத்துக்குப் பேரிடி. அதுதான் தமிழனுக்கு விழுந்த முதல் அடி. படிப்படியாகப் பாடசாலைகளின் தரத்தைக் குறைத்தார்கள். படிப்படியாக திறமையான ஆசிரியர்களை இடமாற்றஞ் செய்தார்கள். யாழ்ப்பாணத்தில் சீராகவும் சிறப்பாகவும் இயங்கி வந்த பாடசாலைகளை சின்னாபின்னப்படுத்திச் சீர்குலைத்தார்கள். மலைநாட்டிலே தமிழ்ப் பாடசாலைகள் சிங்களப் பாடசாலைகளாக்கப்பட்டன. திரு. செல்லையா குமாரசூரியர் அவர்களைப் பார்த்து நான் கூறுகின்றேன், இதுதான் நீங்கள் தமிழ்ச் சாதியை ஒழிக்க எடுத்த முதற்படி.

## இன ஒழிப்பு

பஸ் சேவையைத் தேசியமயமாக்கினீர்கள் இதை யாருக்காகத் தேசியமயமாக்கினீர்கள். பஸ் சேவையைத் தேசியமயமாக்கிப் பதினைந்து ஆண்டுகள் சென்றுவிட்டன. எத்தனையோ ஆயிரம் புதிய பஸ்களை இறக்குமதி செய்திருக்கின்றீர்கள். இன்றைக்காவது ஒரு புதிய பஸ் வண்டியை யாழ்ப்பாணத்தான் பார்க்கவாவது அனுப்பி வைத்திருக்கின்றீர்களா? இதுதான் உங்களுடைய சோசலிசம் திரு. செல்லையா குமாரசூரியர் அவர்களைப் பார்த்து இந்தச் சபையிலே கேட்கின்றேன், திரு. பண்டாரநாயக்க அவர்களுடைய இறுதி மூச்சு அவரை விட்டுப் பிரியும் நேரத்திலே அவர் திருமதி பண்டாரநாயக்கா அவர்களைக் கூப்பிட்டு அல்லது திரு. செல்லையா குமாரசூரியரைக் கூப்பிட்டுக் கூறினாரா தரப்படுத்தலை அமுல் நடத்துங்கள் என்று. தரப்படுத்தல் திரு. பண்டாரநாயக்காவின் கொள்கையாக இருந்தால் 1956 ஆம் ஆண்டிலேயே அது உருவாக்கப்பட்டிருக்கும். தரப்படுத்தல் எந்தெந்த விதத்தில் எமது இனத்தை, சாதியை ஒழிக்க முடியுமோ அந்தந்த விதத்தில் எமது சாதியை, இனத்தை அழித்துக்கொண்டு வருகின்றது.

(14-11-75ல் தேசிய அரசுப் பேரவையில் பேசியது)

## தேசிய அரசுப் பேரவையில் அம்பலப்படுத்தினர் கிளிநொச்சி பா. உ. ஆனந்தசங்கரி!

## சங்கப் பலகை

### நுட்பம்

கட்டுப்பெத்தை வளாகத் தமிழ் மன்றத்தினரின் வெளியீடான நுட்பத்தின் நுழைவாயிலில் நுழையும்போதே நுழைவது பிழைவாயில் அல்ல என்ற உணர்வு ஏற்பட்டு விடுகிறது. இதழாசிரியர் மதுரநாயத்தின் தமிழும் மதுரமாகத்தான் இருக்கிறது.

"பாரதிக்குப்பின்" கட்டுரை பலே! பாரதியில் பிறந்து, பாரதிதாசனில் வளர்ந்து, காசி ஆனந்தனில் கட்டுரை முடிவது பாராட்டத்தக்கது.

கவிதையைப் பொறுத்தவரையில் க. இராஜ மனோகரனின் "பாகத்தைப் பிரிப்போம்" தமிழர் தாகத்தை உணர்த்துவதாக அமைந்த அதே நேரத்தில்தொடர்ந்து 'சரசி'யின் "அண்ணனுக்கு ஓர் கடிதம் எனும் கவிதை 'ஜீவனின்' ஜீவததுடிப்பான "நீரும் நீவிரும்" எனும் கவிதை நடைக் கட்டுரையும் ஈழத்தின் இளம் தமிழ் சமுதாயம் சிந்திக்கத் தொடங்கிவிட்டதைச்சிறப்பாகக்காட்டுகின்றன. ஞான மனோகரனும் 'காணி நிலம் வேண்டும்' என்ற பாரதியின் பாணியிலே "நானிருந்து பாட்டெழுத வேண்டும்" என்று கூறுகிறார் ... பரவாயில்லை கவிதை சிறப்பாக இருக்கின்றது.

மற்றும் சிறுகதைகளும், விஞ்ஞானக் கட்டுரைகளும் வேண்டிய பயனைக்கொடுக்கின்றன.

மொத்தத்தில் "நுட்பம்" மிகவும் நுட்பமாகத்தான் உருவாகியிருக்கிறது. பாராட்டுகிறோம்!

●

### நீதிமுரசு

இலங்கைச் சட்டக்கல்லூரித் தமிழ் மன்றம் வெளியிட்டிருக்கும், வெள்ளிவிழா ஆண்டுமலர் "நீதி முரசு" தமிழர் தம் நற்சேதி முரசாக விளங்குகிறது.

நுழைவாயிலிலேயே அ. உமாசங்கர் வாசகர்களை நிறுத்திவைத்து, நீதிமுரசை "தமிழ் முரசு" என்று கூறி உள்ளே அனுப்பிவைக்கின்றார்.

அதைத்தொடர்ந்து தமிழ் சுழத்து ஆஸ்தானக் கவிஞன் காசி ஆனந்தன் எழுச்சி முரசொலிக்க—டெல்லிபல்கலைக் கழக பேராசிரியர் சாலை இளந்திரையன், தமிழக சட்டசபை அமைச்சர் செ. மாதவன். தந்தை செல்வா அவர்கள் ஆகியோரின் கருத்துரைகளுடன் மலர்ந்த இந்த வெள்ளிவிழா மலர், இதழுக்கு இதழ் எத்தகைய இனிமை சேர்த்திருக்கும் என்பதை இன்னுமோர் சொல்கொண்டு விபரிக்க வேண்டியதில்லை.

நாடகம், நகைச்சுவைகள், சிறுகதை கட்டுரைகள் —தரமுயர்ந்து — அவர் தம் அறிவுக்கு முரசு கொட்டி நிற்கின்றன — வாழ்க சட்ட மாணவர்களின் தமிழ்ப்பணி!

●

### சுவாமி ஞானப்பிரகாசர் நூற்றுண்டு நினைவு மலர்

இம்மலரின் முன்னுரை தொடங்கி நன்றியுரை வரையுள்ள பன்னுரைகளும் இன்னுரைகளாகவே விளங்குகின்றன.

பட்டம் பெருவித்தகர், பன்மொழிப்புலவர், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் நூற்றுண்டு விழா நினைவு மலர், அவர் நினைவை மட்டுமல்லாது, எத்தனையோ பயனுள்ள பல சம்பவங்களை வாசகர்களுக்கு அறிமுகம் செய்துவைக்கின்றது.

இவ்வரிய மலரைவெளியிட்டு தமிழ் உலகிற்கு நல்லூர் சுவாமி ஞானம்பிரகாசரை அறிமுகம் செய்து வைத்திருக்கும் விழாக்குழுவினரும், குறிப்பாக, தொகுப்பாசிரியர் அருட் திரு. ச. ம. செல்வரட்னம் அடிகளும் பாராட்டுதலுக்குரியவர்கள்—

●

### வித்தியோதயம்

இலங்கைப் பல்கலைக்கழக வித்தியோதயவளாக தமிழ் சங்கத்தின் ஆண்டுமலர் "வித்தியோதயம்" கிடைக்கப்பெற்றோம். இது கன்னி முயற்சி என்ற வகையில் பாராட்டுதற்குரியது. மாணவர்கள் தாம் கற்றவற்றை மற்றவர்க்குத்தெளிவு படுத்தியுள்ளனர் என்பது பொய்யாகாது. வருங்காலத்தில் இவர்களால் எவ்வளவோ பயனுள்ள சேவைகளைச் செய்யமுடியும் என்ற நம்பிக்கை இந்த மலரைப் பார்க்கும்போது எழுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனிநாடு சிந்தனையை உருவாக்கிய காரணிகள்...

—6-ம் பக்கத் தொடர்

யில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, சமசமாசக் கட்சி கம்யூனிஸ்ட் கட்சி எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு புதிய அரசாங்கத்தை அமைத்து, தங்கள் சோசலிசக் கொள்கையின் அடிப்படையில் நாட்டிலே இருக்கும் அத்தனை பிரச்சினைகளையும் தீர்ப்போம் என்று கூறிய பொழுது தென்னிலங்கையிலுள்ள இளைஞர்களிலும் பார்க்க வட இலங்கையிலுள்ள மாணவர்கள், உயர் கல்வி பயிலும் மாணவர்கள் இந்த அரசாங்கத்தை வரவேற்றார்கள். அவர்கள் ஏமாற்றப்படப் போகின்றார்கள் என்று எமக்குத் தோன்றியபோதும் அவர்களுடைய குதூகலத்தைக் குறைக்க முடியாமல் இருந்தது. ஆனால், 1971ஆம் ஆண்டு சர்வகலாசாலைப் புகுமுகப் பரீட்சையில் முடிவுகள் வெளியிடப்பட்டதற்குப் பிறகு அவர்களுடைய கல்வி உயர்ச்சிக்குப் பூரண தடை போடப்பட்டதற்குப் பிறகு, தரப்படுத்தல் என்ற அநியாயமான ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து அவர்களுடைய கல்விக்கு முட்டுக்கட்டை போடப்பட்டதற்குப் பிறகு அவர்களுடைய கண்கள் திறந்தன.

அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டன. 'இது சோசலிசம் அல்ல; நாங்கள் ஆளப்படுகின்ற இனம். ஆளுகின்றவன் சோசலிசப் பாதையிலே சென்றால் என்ன, முதலாளித்துவப் பாதையிலே சென்றால் என்ன, ஆளப்படுகிறவன் ஒடுக்கப்படுவான் என்ற கருத்தை வைத்திருந்தார்கள் எங்களுடைய இளைஞர்கள். ஒரு சிலர் சொன்னார்கள், தரப்படுத்தல் விஷத்திலே பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள். நாங்கள் எதற்காக அரசியலிலே ஈடுபடுவான்? வேண்டிய அரசியல் பிரச்சினைகளை தந்தை செல்வநாயகம் அவர்களும் மற்றவர்களும் பார்க்கட்டும் என்று சொல்லி எட்டத்திலே இருந்தார்கள். 1974ஆம் ஆண்டு தை மாதம் 9ஆம் தேதி அவர்களுடைய கண்களும் திறக்கப்பட்டன.

### உலகத் தமிழ் மாநாடு

உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டின் கடைசி நாள் நிகழ்ச்சி. ஏதோ, தென்னிந்தியாவிலே இருந்து ஒரு இஸ்லாமிய பேராசிரியர் தமிழின் பெருமையைப் பற்றிப் பேசப் போகிறார் என்று அறிந்து யாழ்ப்பாண முற்றவெளியிலே இலட்சக் கணக்கான மக்கள் கூடியிருந்தார்கள். அரசியலிலே அக்கறை இல்லாதவர்கள், கலை நிகழ்ச்சிக்கு வந்திருந்தார்கள். அங்கே நடந்த நிகழ்ச்சி அங்கே சமூகம் கொடுத்த அத்தனை பேர்களுடைய கண்களையும் திறந்தது; இந்த நாட்டில் நாம் ஆளப்படுகின்றவர்கள், எமக்கு கலாச்சார விஷயத்தைக் கூடப் பார்ப்பதற்கு உரிமையில்லை என்ற நிலையை எடுத்துக் காட்டியது.

அங்கே நடந்த மரணங்கள் சம்பந்தமாக ஒரு விசாரணைக் குழுவை நியமியுங்கள்; அங்கே இறந்த ஒன்பது பேர்களும் ஏன் இறந்தார்கள் என்பதை ஆராயுங்கள் என்ற கோரிக்கையை பிரதமரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. பிரதமர் அவர்கள் ஒரு விசாரணைக் குழுவை நியமிக்கவில்லை. அந்த அடிப்படையிலே தமிழ்த் தலைவர்கள் ஒன்று கூடி நாட்டில் மதிக்கப்படுகின்ற முன்னர் உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற ஒருவரை, நீதிமன்ற நீதிபதி திரு. கிரேஸ்ட்டர் அவர்களையும், ஓய்வு பெற்ற நீதிபதி மாணிக்கவாசகர் அவர்களையும், யாழ்ப்பாண மேற்றிராணியார் வண. குலேந்திரன் அவர்களையும் கொண்ட விசாரணைக் குழு ஒன்றை நியமித்தார்கள். அந்த விசாரணைக் குழு ஒரு பாரபட்சமற்ற அறிக்கையைச் சமர்ப்பித்து. அந்த அறிக்கையிலிருந்து எழும் விஷயங்களையாவது அடிப்படையாக வைத்து நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டோம். அதற்கும் அரசாங்கம் செவிசாய்க்கவில்லை. இந்தச் சம்பவங்கள் எல்லாம் எங்களுடைய அரசியல் கொள்கைகளை மக்கள் உணர உதவியாக இருந்தன. யாராவது தப்பித் தவறி நானும் இந்த நாட்டை ஆளுகிறவன் என்று கருதினால்; இல்லையப்பா, நீ ஆளவில்லை. ஆளப்படுகிறவன் என்று சொல்லக்கூடிய நிலைக்கு உங்கள் நடவடிக்கைகள் மக்களைக் கொண்டு செல்கின்றன.


தே.க.பொ.த (N.C.G.E) 8-ம் வகுப்பு மாணவர்களுக்கு
வெளிவந்துவிட்டது!
பல விஞ்ஞான நூல்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆக்கித் தந்த, மாணவர்களின் அபிமானமுள்ள
* பரமானந்தன் * இரத்தினசிங்கம் * ஏபிரகாம் லிங்கன்
ஆகியோர் எழுதிய

**புதிய விஞ்ஞானம்-8**

இரண்டாம் பருவம்
புதிய முறை வினு — விடைகளுடன் கூடியது
1974ஆம் ஆண்டு கல்வி அமைச்சுவின்-
புதிய வழிகாட்டியைத் தழுவிய ஒரே நூல்!
எல்லாப் புத்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும்.
வெளியிடுவோர்:

**விஜயலட்சுமி புத்தகசாலை**

248, காலி வீதி, வெள்ளவத்தை கொழும்பு-6.
விலை ரூபா 3.75
பரமானந்தனின் நவீன உயிரியல் பகுதி II சில பிரதிகள் உள்ளன. V.P.P.யில் அனுப்பிவைக்கப்படும்.
தொடர்பு கொள்க:- குமரன் அச்சகம், 201, டாம் வீதி, கொழும்பு-12.



அவன் ஓர் மனிதன்!
மனிதனாக உலகில் பிறந்தவன்
எல்லாவிதமான இன்பங்களையும்
அனுபவிக்கவேண்டும்?
என்றதன்படி சுதந்திரப் பறவையாக திரிந்தான்!
**பலன்!**
பலபெண்கள்—?........
இவர்களைச் சார்ந்தவர்கள்......!
ஸ்ஸ...........சஸ்பென்ஸ்.
ஏன். என்ன நடந்தது
எப்படி விளக்குகிறது

கதை — வசனம் டைரக்ஷன் கே. பாலசந்தர்

**நான் அவனில்லை**

5-வது வாரம்
**செல்லமகால்**
ஜெமினி — கமலஹாசன்
ஜெயசுதா — தேங்காய்
ஒரு விரல் கிருஷ்ணராவ்
அசோகன், லக்ஷ்மி, ஜெயபாரதி.

**கெயிட்டி** 6-வது வாரம்!
ஜெய்சங்கர்- கே. ஆர். விஜயா
அசோகன், நாகேஷ்,
வீ. கே. ராமசாமி நடித்த—
**திருடி**

**நெல்சன்** (திருமலை)
தினசரி—6, 9.30 சனி-ஞாயிறு 2.30, 6, 9 30
சிவகுமார், ஜெயசித்திரா, சசிகுமார் நடித்த
தேவரின்
**வெள்ளிக்கிழமை விரதம்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ராஜ்மகால்** (மாத்தளை) 2வதுவாரம்
தினசரி 2 30, 6, 9 மணி
சிவாஜி—ஜெயலலிதா -நடித்த- **தாய்**

**எம்பயர்** 5-வது வாரம்!
அமிற்றுப் பச்சான், ஜெயபாதுரி நடித்த-
**அபிமான்**


**குயின்ஸ்** (காலி) 3-வது வாரம்!
தினசரி 2-30, 6, 9-30
சஷிகபூர் — மும்தாஸ் நடித்த-
**சோர் மச்சாயே சோர்**
(ஈஸ்ட்மென் கலர்)



6-வது வெற்றி வாரம்!
**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாசா** **வெலிங்டன்** (யாழ்நகர்)
முத்துராமன், கே. ஆர். விஜயா, ஜெயசித்ரா
சிவகுமார், சுந்தரராஜன் நடித்த—

**தீர்க்க சுமங்கலி**

குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என்ற கருத்தை விளக்கும் சிறந்த குடும்பச் சித்திரம்



18-வது கடைசிவாரம்!
**கெப்பிட்டல்**
**வெள்ளிக்கிழமை விரதம்**
(ஈஸ்ட்மன் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமி[illegible] கொழும்பு—12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1975—ம் வருடம் டிசம்பர் மாதம் 7-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.